


32ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059 www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca www.tamilvanakkam.com




நதி: 32 பாலம்: 11 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JUNE 01, 2022

# தேர்தல் கருத்துக்கணிப்புகள்!

ஒன்ராறியோ மாகாணத் தேர்தல் 2022 யூன் 2ஆம் திகதி நடைபெற இருக்கும் நிலையில், பலதரப்பட்ட ஊடகங்கள் தினமும் தமது கருத்துக் கணிப்புகளை வெளியிட்ட வண்ணம் உள்ளன.

2018 யூன் 7இல் நடைபெற்ற ஒன்ராறியோ மாகாணப் பொதுத் தேர்தலில் பழமைவாதக்கட்சி 40% வாக்குகளைப் பெற்று 76 ஆசனங்களைப் பெற்றது. புதிய ஜனநாயகக் கட்சி 34% வாக்குகளைப் பெற்று 40 ஆசனங்களைப் பெற்றது. லிபரல் கட்சி 20% வாக்குகளைப் பெற்று 7 ஆசனங்களையும், பசுமைக் கட்சி 5% வாக்குகளைப் பெற்று 1 ஆசனத்தையும் பெற்றது.

ஒன்ராறியோ சட்டசபையில் 124 ஆசனங்கள் உள்ளன. அவற்றில் 63 ஆசனங்களைப் பெறும் கட்சியே பெரும்பான்மை அரசை அமைக்கத் தகுதி பெறும். இதனால் கடந்த தேர்தலில் 76 ஆசனங்களைப் பெற்ற பழமைவாதக்கட்சி அரசை அமைக்க, 40 ஆசனங்களைப் பெற்ற புதிய ஜனநாயகக்கட்சி உத்தியோகபூர்வ மான எதிர்க்கட்சி ஆனது.

தற்போதைய கருத்துகணிப்புகள் 2022 யூன் 2இல் நடைபெறும் ஒன்ராறியோ மாகாணப் பொதுத்தேர்தலிலும் பழமை வாதக்கட்சி அறுதிப் பெரும் பான்மைக்குத் தேவையான 63இற்கு மேற்பட்ட ஆசனங்களைப் பெற்று மீண்டும் ஒன்ராறியோ மாகாணத்தில் அரசு அமைக்கும் எனத் தெரிவிக்கின்றன.

மே 25இல் வெளியான CTV ஊடகத்தின் சார்ப்பில் Nanos ஆய்வு நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பின் முடிவுகளின்படி பழமைவாதக்கட்சி 37%ஆன மக்களின் ஆதரவைப் பெற்று முன்னணியில் நிற்கின்றது. அடுத்ததாக 28% மக்களின் ஆதரவை பெற்று லிபரல் கட்சி இரண்டாவது இடத்தில் நிற்கிறது. புதிய ஜனநாயகக் கட்சிக்கு 23% மக்களின் ஆதரவும் பசுமைக்கட்சிக்கு 6% மக்களின் ஆதரவும் கிடைத்துள்ளன.



ஒன்ராறியோ மாகாணத்திற்கான பொதுத்தேர்தல் அறிவிக்கும்போதே பழமைவாதக்கட்சி அதிகப்படியான மக்களின் ஆதரவைப்பெற்று முன்ன ணியில் இருந்தது. தேர்தல் அறிவிப்பு வெளியாகிச் சில வாரங்களில் நடை பெற்ற கருத்துக் கணிப்பில் 35% மக்களின் ஆதரவைப் பெற்று முன்னணியில் நின்ற பழமைவாதக் கட்சி அடுத்தடுத்த வாரங்களில் 36% மக்களின் ஆதரவைப்பெற்று தற்போது 37% மக்களின் ஆதரவைப் பெற்றிருந் தாலும் அது 2018ஆம் ஆண்டில் பெற்ற 40% மக்களின் ஆதரவைவிடக் குறைவாகவே தற்போது பெற்றுள்ளது. இதனால் இம்முறை பழமைவாதக்கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் ஒன்ராறியோ மாகாணத்தில் ஆட்சி அமைத்தாலும் அது பெறும் ஆசனங் களின் எண்ணிக்கை கடந்த முறை பெற்ற 76 ஆசனங்களைவிடக் குறை வாகவே இருக்கும் என CBC ஊடகத்தின் கருத்துக் கணிப்பு கூறுகிறது.

மக்களின் ஆதரவைப் பொறுத்தமட்டில் 23%ஐப் பெற்று மூன்றாவது இடத்தில் இருக்கும் புதிய ஜனநாயகக் கட்சியே இரண்டாவது அதிகூடிய ஆசனங் களைப் பெற்று மீண்டும் உத்தியோக பூர்வமான எதிர்க்கட்சியாக வரும் என CBC ஊடகத்தின் கருத்துக்கணிப்புக் கூறுகிறது.

மக்களின் ஆதரவைப் பொறுத்தமட்டில் 28%ஐப்பெற்று இரண்டாவது இடத்தில் இருக்கும் லிபரல் கட்சி மீண்டும் ஒன்ராறியோ சட்டசபையில் மூன்றாவது அதிகப்படியான ஆசனங்களைப்பெற்ற கட்சியாகவே வரும் என CBC ஊடகத் தின் கருத்துக்கணிப்புக் கூறுகிறது.

கடந்த தேர்தலில் போட்டியிடும்போது

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)

























EXPERIENCE THE DIFFERENCE
RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
1286 Kennedy Rd Scarborough Ont M1P 2L5
Thas Thirunavukkarasu Dip-in-Eng(Hons)
Broker, ABR, SRS
416.388.4333
thasremax@gmail.com www.soldbythas.com
Markham
$1,588,888
4+1 BR , 4 WR
Markham Rd/Denison St
SOLD
HIGHEST SOLD
PRICE ON THE STREET *
Semi-D- 4BR,4WR, Fin Bsmt,Sep E
Kingston Rd/ McCowan Rd
$2,899,000
Detached - BR: 5+5 WR:5
Lindsay
$399,000
Residential Land
Whitby
$1,098,900
Brand New - 3BR + 3WR
Midland Ave/ Kingston Rd
$659,900
2BR 2WR
Chinguacousy Rd & Wanless Dr
Brand New
Home in Brampton.
Closing Feb 2024.
$1,299,900
Semi-Detached BR: 3 WR: 4
Jane/Rutherford
FROM $ 599,000
10 UNITS
AVAILABLE
BR: 1 WR:1 Assignment Sale


WORK WITH THE BEST TEAM
GET YOUR HOME SOLD!
#1 HOMELIFE TEAM
IN ONTARIO
SIVA & JOY
KNOWLEDGE • EXPERIENCE • SUCCESS
irealtorteam.com
futuregtahomes.com
SIVA
SHANMUGANATHAN
Broker
JOY
SELVANAYAGAM
Broker
SASIKUMAR
SHANMUGANATHAN
Broker
416.545.7482
416.709.5000
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
Bus: 905.201.9977


Available Till Midnight
Including Weekends & Holidays
ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT
#1 Mortgage Agent in GTA
#2 in Canada
CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS
PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL
MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS
416 704 1200
anton@myhomemls.ca
MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4
FAX: 1 866 566 3068

## நாமும் நமது இல்லமும் 608

# கனடிய வட்டி வீதமும் பண வீக்கமும்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

இந்த வருட (2022) மார்ச், ஏப்ரல் மாதங்களில் ஆதன வியாபாரம் குறிப்பிட்டளவு குறைந்து வருவதனைக் காணக் கூடியதாக உள்ளது. ஜனவரி, பெப்ரவரியில் ஆதனம் அதிகூடிய விலை கொடுத்து வாங்கியதாகக் கனடியர்கள் உணர்வதாக ஆதன முகவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே, இந்த மாதங்களில் வாங்கிய தனை விட ஆதனவிலை சில பகுதிகளில் 20%இற்கு மேலாக குறைந்துள்ளதனைக் காணலாம். எனினும், இப்பொழுது சில பகுதிகளில் அதிக விலை கொடுத்து வாங்குவதனையும் காணலாம். ஆதனம் வாங்குவோர் அனுபமிக்க முகவருடன் தொடர்பு வைத்திருப்பது இவ்வாறான நிலைமைகளை இலகுவாக தாண்டக் கூடியதாக இருக்கும். அதிகவிலை கொடுத்து வாங்கியவர்கள் ஒப்பமிட்ட ஆதனப்பத்திரத்திலிருந்து எவ்வாறு வெளியேறலாம் என சட்டத்தரணிகளை நாடுவதனையும் அறியக்கூடியதாக உள்ளது.

ஏற்கனவே ஆதனம் வாங்கிய சிலர், ஆதனத்தை விற்றவர்களுடன் விலையை மாற்றும் செய்யுமாறு (குறைக்குமாறு) கேட்பதனைக் காணலாம். சிலர் முற்றாக வாங்கிய பத்திரத்தை (Agreement of Purchase and Sale) கைவிட்டுச் செல்கின்றனர். எதிர் காலத்தில் இவ்வாறான வாங்குனர்கள் சட்டப்பிரச்சினையை எதிர்நோக்க வேண்டி வரும். விற்றவருடன் திருப்பி விலையை மாற்றக் கேட்பது சிறந்தது அல்லது வேறுவிதமான நன்மைகளைப் பெறுவது. பொதுவாக அதிகவிலை கொடுத்து ஆதனம் வாங்கும்போது இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவது இயல்பு. இறுதியாக 2017இல் இந்நிலைமை ஏற்பட்டது. அப்பொழுது ஏற்பட்ட பல சட்டச்சிக்கல்கள் இன்றும் தொடர்வதனைக் காணலாம். 2020இன் ஆரம்பத்திலும் கோவிட்-19இன் பாதிப்பு ஆரம்பித்த போதிலும் சிறிது காலம் இந்நிலைமை ஏற்பட்டது.

எனினும், வட்டிவீத அதீத குறைப்பு நிலைமையை சடுதியாக மாற்றி வியாபாரத்தையும், விலையையும் மே 2020இலிருந்து அதிகரிக்க வைத்தது. இதன் தொடர்ச்சி மார்ச் 2022வரை தொடர்ந்தது.



பணவீக்கத்தின் (Inflation) நிலைமையை ஆராயும்போது, உலகின் பல நாடுகளிலும் அதிகரித்தே செல்கின்றது. கனடா பணவீக்கத்தை 2%இற்குக் குறைவாக வைத்திருப்பதனையே கொள்கையாக வைத்திருந்தது. மார்ச் 2022இல் இந்தப் பெறுமதி கடந்த 31 வருடத்தில் அதிகமாக 6.7%ஆக அதிகரித்து இருந்தது. மார்ச் மாதத்தில் அமெரிக்காவினது 8.5%ஆகவும் இந்தியா வின் பணவீக்கம் ஏப்ரலில் 15.09%ஆகவும் அதிகரித்துள்ளது.

இதனாலேயே, அனேகமாக அரச மத்திய வங்கிகள் வட்டிவீதத்தை அதிகரிக்க வேண்டி நிர்ப்பந்தத்தில் உள்ளது.

பணவீக்கம் கட்டுக்குள் வரும்வரை வட்டிவீதம் அதிகரிக்க வேண்டியேயுள்ளது. இதேநிலை 1960களிலும் 1970களிலும் ஏற்பட்டு இருந்தது.

இன்றைய கனடிய முதன்மை வட்டிவீதம் 3.2%ஆகக் காணப்படுகின்றது. 1960களிலும் 1970களிலும் 42 மாதங்களில் முதன்மை வட்டி வீதம் 14.5% ஆக அதிகரித்தது.

ஆனால், 60, 70, 80, 90களின் பொருளாதார நிலைமையை 2002 உடன் ஒப்பிடும்போது வித்தியாசமானது. கனடியர் களின் தனிப்பெறுமதி அதிகமாக இன்று காணப்படுகின்றது. இன்றைய அடமானக் கடனும் அன்றுடன் ஒப்பிடும் போது மிகவும் அதிகமாகவே உள்ளது. வட்டி வீதத்தை மத்திய வங்கி அதிகரிக்க வேண்டிய நிலைமையே உள்ளது. எனினும், அதிகளவிற்கு அதிகரிக்க முடியாத நிலைமையிலேயே உள்ளது. உடனடியான வட்டி அதிகரிப்பு கனடியப் பொருளாதாரத்தில் பொருளாதார சுருக்கத்தை (Recession) ஏற்படுத்திவிடும். எனவே கனடிய மத்திய வங்கி மிகவும் கவனமாக நிலைமையை கையாள வேண்டியுள்ளது. எனினும் வட்டி வீதம் அதிகரிக்கும். எவ்வளவு காலம்? எந்தளவிற்கு அதிகரிக்கும்!

### அமெரிக்க ஆதன வியாபாரம் குறைகின்றது!

பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் 2022 இல் தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் அமெரிக்காவின் ஆதன வியாபாரங்கள் குறைகின்றது. வட்டி வீத அதிகரிப்பு அடமானக்கடன் பெறுவதில் உள்ள நெருக்கடியால் வியாபாரம் குறைவதாக தெரியவருகின்றது. எனினும் ஆதனத்தின் மீடியன் (Median) விலை கடந்த வருட (2021) ஏப்ரலுடன் ஒப்பிடும்போது 14.8%இனால் அதிகரித்து US $391,200 ஆகக் காணப்படுகின்றது.

அழுவதும் தவறில்லை..
விழுவதும் தவறில்லை..
ஆனால்,
அழுதபின்
சிரிக்காமல்
இருப்பதும்..
விழுந்த பின்
எழாமல்
இருப்பதும்
தான் தவறு..





Govt. Reg. No.571/2007
திருச்சிற்றம்பலம்
அன்னதான அறக்கட்டளை
அனைவரும் சாப்பிட வாருங்கள்!
சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோயில் ஆனி திருமஞ்சன திருவிழா அழைப்பிதழ்
27-06-2022, திங்கட் கிழமை முதல் 07-07-2022, வியாழக்கிழமை வரை நடைபெறும் திருவிழாவை காணவரும் பக்தர்களுக்கு திருச்சிற்றம்பலம் அன்னதான அறக்கட்டளையில் சிறப்பு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஒரு நாள் கட்டளை உபயம் இந்தியன் ரூபாய் 50,000 ஆகின்றது. தங்களால் இயன்றதை செலுத்தி இந்த தர்மத்தில் தாங்களும் முடிந்த அளவு பங்கு கொண்டு இதன் சிறந்த பலன்களை அடைய அன்புடன் அழைக்கின்றோம்.
நன்கொடைகளை செலுத்தி தங்கள் விலாசம் குடும்ப பெயர்கள் நட்சத்திரம் ராசி, கோத்ரம் எழுதி அனுப்பவும். ஸ்ரீ நடராஜரிடத்தில் தங்கள் குடும்பம் சங்கல்பம் பூஜை செய்து பிரசாதங்கள், முறையான ரசீது அனுப்பி வைக்கின்றோம். வாழ்க வளமுடன், வளர்க நலமுடன், ஆசிர்வாதங்கள்.
C.NAVATHANDAVADEEKCHIDHAR, 22/10, East Sannathi, Chidambaram - 608001. Tamil Nadu, India. Mob: 93455 12976
Thiruchitrambalam Annadhana Trust
State Bank of India A/c No.30263863248
Chidambaram Branch IFSC: SBIN0000823
e-mail: santhanasubramani1969@yahoo.com, anandhancdm2015@gmail.com
Google Pay: 93455 12976 (OmGanesh) Whatsapp: 93455 12976
web: thiruchitrambaalam.org


# MORTGAGE & LINE OF CREDIT

- ⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)
- ⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC - No Income Required*)
- ⇒ **Private Mortgage** (No Income Verification)
- ⇒ ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்
- ⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்
- ⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க
- ⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்**
**வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

MORTGAGE CLINIC



**ஜெ(Jey)இராசதுரை**
MBA. BBA (Hon) AMP

Team Leader / Mortgage & Real Estate Broker

**Cell : 416-624- 4843**



www.mortgageclinicccanada.com

**416-613-2788 / 416-816-9011**

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 1396 Don Mills Rd, Unit B121Toronto ON M3B 0A7 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4

# NOTARY PUBLIC & LEGAL SERVICES

**Notarizations, Certifications & Commissioning**

* Affidavits
* Certification of True Copy
* Preparation and Notarize the Letter of Invitation
* Commissioning Statutory Declarations and Solemn Affirmations
* Power Of Attorney & Will

* Small Claims
* Landlord & Tenant Matters
* Business Registration & Renewal

AAA Legal Services

AAA LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

**Call:(416) 814 -7450**
(Markham Rd & HWY 401 - Scarborough)

** Promotional Rate for students
$20per sign

# 1986இன் வடமராட்சி லிபரேசன் ஒப்பரேசன் படுகொலைகள்


## 36ஆவது வருட நினைவலைகள்

**- வல்வை ந. அனந்தராஜ் -**

1984இல் இருந்து 1986வரை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த யாழ். குடாநாட்டில் அமைந்துள்ள வடமராட்சியை மீட்டெடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப் பட்ட வலிந்த தாக்குதலாக "வடமராட்சி லிபரேசன் ஒப்பரேசன்" என்று பெயர் சூட்டப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கை 1986ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதிவரை இடம்பெற்றது.

வடமராட்சியின் மீது இராணுவம், கடற்படை, விமானப் படை இணைந்து மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல் நடவடிக்கையில் 856 வரையான பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், 400 வரையான இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். ஏறத்தாழ 40,000 பொதுமக்கள் பாதிக்கப் பட்டு தமது குடியிருப்புக்களை இழந்து அகதிகளாக்கப்பட்டதுடன் பல கோடிக் கணக்கான சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் உள்ளன.

வடமராட்சியின் மீதான இந்த மும்முனைத் தாக்குதல் 1987.05.26இல், சிரேஸ்ட இராணுவத் தளபதிகளான பிரிகேடியர். டென்சில் கொப்பேகடுவ, கேணல்.விஜயவிமலரத்ன ஆகியோரின் தலைமையில் 8,000 துருப்புக் களுடன் லெப்டினன்ட் கேர்ணல் விபுல் பொதேஜு மற்றும் லெப். கேர்ணல் வசந்த பெரேராவின் கட்டளையின் கீழ் செயற்பட்ட கெமுனு வாட்ச் (Gemunu Watch), லெப்டினன்ட் கேர்ணல் சதிஸ் ஜெயசுந்தர மற்றும் தற்போதைய ஜனாதிபதி, அப்போதைய மேஜர் கோட்டாபய ராஜபக்ஸவின் கீழ் செயற்பட்ட கஜபா ரெஜிமென்ட், மற்றும் லெப்டினன்ட் கேர்ணல் நாரதா விக்கிரமரத்னவின் வழிகாட்டலின் கீழ் இலங்கை லைட் காலாட் படை (SriLanka Light Infantry) ஆகிய படையணியினரின் தாக்குதலுடன் ஆரம்பமானது. இவர்களுக்கு இலங்கை விமானப்படை வான்வழியான ஆதரவையும் வழிகாட்டலையும் வழங்கிக் கொண்டு இருந்தது.



இந்தப் பாரிய இராணுவ நடவடிக்கைக்கு இராணுவத்தை வழிநடத்தியதோடு, அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனா, பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஆகியோர் இதற்கான அரசியல் தலைமைத்துவத்தையும், ஆலோசனைகளையும் வழங்கிய இருந்தனர்.

பிரித்தானியர் ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்த பின்னர் இலங்கை இராணுவம் தமிழருக்கு எதிராக மேற்கொண்ட முதலாவது மரபுவழிப் போராக இந்த இராணுவ நடவடிக்கை அமைந்தது. இந்த நடவடிக்கையில் ஆரம்பத்தில் படையினர் பலாலியில் இருந்து தொண்டைமானாற்றின் ஊடாகவே வடமராட்சிக்குள் நுழைய வேண்டும். இதற்காக, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஊரான வல்வெட்டித்துறைக்கு அரசுப் படைகள் வருவதைத் தடுக்க விடுதலைப் புலிகளின் தற்காப்பு நடவடிக்கையாகத் தொண்டைமானாறு பாலத்தைத் தகர்த்திருந்தனர். இதனால் தொண்டமானாற்றின் ஊடாகத் துருப்புக்கள் வெளியேறி முன்னேறுவது என்பது சிரமமாக இருந்தது. தொண்டமானாற்றின் கிழக்குப் பகுதியில் உள்ள பாதை விடுதலைப் புலிகளால் அகழ்ந்து எடுக்கப்பட்டு அகழிகளாக்கப்பட்டதுடன், மனிதப்பொறிகள் மற்றும் புலிகளால் விதைக்கப்பட்ட நிலக் கண்ணிவெடிகளின் மத்தியில் இராணுவத்தினரால் எதிர்பார்த்து போன்று சுலபமாக முன்னேற முடியவில்லை. புலிகளால் விதைக்கப்பட்ட பொறிகளையும், பல நூற்றுக்கணக்கான கண்ணிவெடிகளையும் அகற்றும் பொறுப்பு மேஜர் லக்கி ராஜசிங்கவின் கீழ் செயற்படும் இலங்கை பொறியியாளர்களின் 2ஆவது களப் பொறியியலாளர் படையணியினரிடம் கையளிக்கப்பட்டது. போரின் முதல்நாள் களப் பொறியியலாளர்களினால், கண்ணி வெடிகளையும், பொறிவெடிகளையும் அகற்றுவது ஆபத்தான பணியாகவே இருந்தது.

யுத்த நடவடிக்கை ஆரம்பமாகி நான்கு மணித்தியாலத்திற்குள், இராணுவத் தளபதி மேஜர் ராஜசிங்க படுகாயமடைந்ததுடன், 42 இராணுவத்தினர் கொல்லப் பட்டனர். இந்த நடவடிக்கையின் ஆரம்பத்திலேயே இந்த இழப்பு ஏற்பட்டதால் இராணுவத்தினரிடையே சோர்வும், அச்சமும் ஏற்பட்டது. இந்த நிலையில் உடனடியாகவே அந்தப் பிரிவு மேஜர் கோட்டாபய ராஜபக்சாவினால் பொறுப்பேற்கப்பட்டு அவரது கட்டளையின் கீழ் கஜபா படைப்பிரிவின் துணையுடன், புலிகளின் பதுங்குகுழிகளில் இருந்து மேற்கொள்ளப்பட்ட தீவிரமான மோட்டார்த் தாக்குதல்களில் இருந்து அவர்களால் அமைக்கப்பட்ட கண்ணிவெடி வயல்களை உடைக்க முடிந்தது. அதனைத் தொடர்ந்து 1986ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் திகதி உடுப்பிட்டி மற்றும் வல்வெட்டித்துறையை ஸ்ரீலங்கா துருப்புக்கள் கைப்பற்றினர். மேலும் மற்றொரு படையணி மேஜர்.சரத் ஹந்தபங்கொடவின் தலைமையிலான கொமாண்டோக்களின் உதவியினால் நெல்லியடியை கைப்பற்றியதைத் தொடர்ந்து, பருத்தித்துறை நோக்கி முன்னேறினர்.

ஸ்ரீலங்கா அரசபடைகள் தொண்டைமான் ஆற்றை நெருங்கும் வரைக்கும் விடுதலைப்புலிகளிடம் இருந்து கடுமையான எதிர்த்தாக்குதல்கள் இடம்பெற்றாலும், பின்னர் அவர்களின் தந்திரோபாய நடவடிக்கையாக அந்தப் பிரதேசத்தில் இருந்தும் முற்றாகவே பின்வாங்கி வெளியேறியதால் அவர்களில் எவருக்கும் உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை.



ஜெனரல் நளின் செனிவிரத்ன  மேஜர் கோட்டபாய ராஜபக்ச  மேஜர் சரத் பொன்சேகா(ஜெனரல்)

பிரிகேடியர், பின்னர் லெப்டினன்ட் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்ட டென்சில் கொப்பேகடுவ மற்றும் கேணல் பின்னர் மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்ட விஜய விமலரத்தின இருவரும் யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றுவதற்கான ஒரு நடவடிக்கையின் போது, 1992.08.08ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தாக்குதலின் போது கொல்லப் பட்டனர். அதன் பின்னர் தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்சவின் சகோதரர் கோட்டாபாய ராஜபக்ச, அவர்களின் பொறுப்புக்களை ஏற்று இராணுவத் தாக்குதலில் பங்கேற்றார், அதனைத் தொடர்ந்து கோட்டாபாய மேஜராகத் தரம் உயர்த்தப்பட்டார். இவரே பின்னர் பல வருடங்களின் பின்னர் சிங்கள மக்களின் ஏகபோக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டு ஸ்ரீலங்காவின் இன்றைய ஜனாதிபதி ஆகத் தெரிவு செய்யப்பட்டார். ஆனால் அவரது சர்வாதிகாரப் போக்கு மற்றும் ஊழல்கள் காரணமாக அவரைத் தெரிவுசெய்த மக்களே "கோட்டா கோ கம" என்று கோசங்களை இட்டபடி அவரை வீட்டிற்குப் போகுமாறு ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர்.

ஸ்ரீலங்கா அரசின் கூட்டுப்படை நடவடிக்கைகளின் முதல்கட்டமாக, நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழர்களைத் தமது சொந்த வீடுகளில் இருந்தும் விரட்டியடித்து அவர்களது நிலங்களைக் கைப்பற்றும் ஓர் இனவாத நடவடிக்கையாக இது அமைந்தது. இந்த இராணுவ நடவடிக்கை மூலம் பலாலியில் கூட்டுப் படைத் தளத்தில் இருந்து வெளிவந்த இராணுவத்தினர் வசாவிளான், குரும்பசிட்டி போன்ற பகுதிகளில் முன்னேறினர். இந்த இராணுவ நடவடிக்கை அதிகாலையிலேயே முன்னெடுக்கப்பட்டதால், பெருந்தொகையான மக்கள் அதிர்சி அடைந்து கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு இடம்பெயர்ந்தனர்.

இதில் பெரும்பாலான தமிழரின் வீடுகள் புல்டோசர்கள் மூலம் இடித்தழிக்கப்பட்டன. இந்தியாவிற்கு விமானம் மூலம் பயணம் செய்யப் பயன்படுத்தப்பட்ட பலாலி விமான நிலையத்தில் இருந்து திருச்சிக்கான விமானப் போக்குவரத்தும் இடைநிறுத்தப் பட்டு அந்தப் பிரதேசம் முழுமையாக இராணுவம் மற்றும் விமானப்படைகளின் தளமாக்கப்பட்டது. அதனை அடுத்து பல நூற்றுக்கணக்கான தமிழரின் பூர்வீகப் பிரதேசங்களைப் பலாத்காரமாகப் பறிமுதல்செய்து பலாலி விமான நிலையமும் பலமடங்கு விஸ்தரிக்கப்பட்டது. இன்றும் இப்பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் மீளத் திரும்புவதற்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றது. பலாலி விமானப்படைத் தளத்தை விஸ்தரிப்பதுடன், விடுதலைப் புலிகளின் தலைவரின் சொந்த ஊரான வல்வெட்டித்துறை நகரத்தையும் அதனைச் சுற்றியுள்ள உடுப்பிட்டி, பொலிகண்டி ஆகிய கிராமங்களையும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளை முற்றாக முடக்குவதே பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் இலக்காகவும் இருந்தது.

இந்தப் படைநடவடிக்கையில், ஸ்ரீலங்கா அரச படைகளின் கூட்டுப்படைத் தளபதி சிறில் ரணதுங்க மற்றும் இராணுவ அதிகாரிகளான லலித் கொத்தலாவல,

(தொடர்ச்சி 08ஆம் பக்கம்...)

விளம்பரம் VLAMBARAM
32ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும். விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# 7 பேர், 31 ஆண்டுகள்: கம்பிக்குள் வெளிச்சம்

## பேரறிவாளன் விடுதலையும் தமிழ்நாடு மாநில உரிமை மீட்பும்

**- கண்ணன் -**

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் முடிவற்று நீண்டு கொண்டே இருந்த பேரறிவாளன் விடுதலை முடிவுக்கு வந்திருக்கிறது. பேரறிவாளனை விடுதலை செய்து இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. 31 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்துவிட்ட பேரறிவாளன் விடுதலை மனிதாபிமான - மனித உரிமை அடிப்படையில் வரவேற்கத்தக்கதாக அமைந்திருக்கும் அதேவேளையில், இந்தியாவில் மாநிலங்கள் உரிமையானது இந்தத் தீர்ப்பின் மூலமாக மீண்டும் நிலைநாட்டப்பட்டுள்ளதால் வரலாற்றில் இடம்பெறத் தக்க ஒரு முக்கிய வழக்காகவும் இது அமைந்துள்ளது.

எப்படி எனப் பார்க்கும் முன், இந்த வழக்கு கடந்து வந்த பாதை; ஒரு பருந்துப் பார்வை;

### ராஜீவ்காந்தி மரணம்

1991 மே 21; இந்தியாவின் பத்தாவது நாடாளுமன்றத் தேர்தல் நேரம்; அப்போது மீண்டும் இந்தியாவின் பிரதமர் ஆவார் என்று எதிர்பார்க்கப்பட்ட காங்கிரஸ் தலைவர் ராஜீவ்காந்தி தமிழ்நாட்டுக்கு அன்று தேர்தல் பிரச்சாரத்துக்கு வந்திருந்தார். சென்னையிலிருந்து ஒரு வெள்ளை அம்பாசிடரில் ஸ்ரீபெரும்புதூர் சென்ற ராஜீவ் பிரச்சார மேடையை நோக்கி நடக்க ஆரம்பித்தார். வழியில் காங்கிரஸ் கட்சிக்காரர்கள், பள்ளிக் குழந்தைகள் மாலை அணுவித்தனர். ராஜீவ் காந்தியை நெருங்கிய ஒரு பெண் அவரது கால்களை தொட கீழே குனிந்தார். அப்போது மணி இரவு 10:21; பயங்கரமான ஒரு வெடிச் சத்தம். ராஜீவ்காந்தி உட்பட 14 பேர் அந்த குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டனர். யார் செய்தார்கள்? எத்தனை பேர்? எதற்குச் செய்தார்கள்? எப்படிச் செய்தார்கள்? என்று யாருக்கும் தெரியாத நிலையில் சம்பவ இடத்தில் கிடந்த ஒரு கேமராவில் பதிவாகியிருந்த காட்சிகள் மூலம் கொஞ்சம் கொஞ்சமாக துப்பு துலங்கத் தொடங்கியது.

இந்த வழக்கை விசாரித்த இந்திய ஒன்றிய அரசின் புலனாய்வு பிரிவான சிபிஐ, ராஜீவ் காந்தி காலில் விழுந்த பெண்தான் குனியும் போது தனது ஆடையின் அடியே வைத்திருந்த ஆர்.டி. எக்ஸ் வெடிபொருளை வெடிக்கச் செய்தார் என்றும், அவர் பெயர் தனு என்றும், அவர் விடுதலைப் புலிகள் அமைப்பின் தற்கொலைப் படையைச் சேர்ந்தவர் என்றும் விசாரணையில் தெரிய வந்ததாக அறிவித்தது.

தொடர்ந்து நடைபெற்ற புலன் விசாரணையில், இந்த வழக்கில் முக்கிய நபர்கள் என குறிப்பிடப்பட்ட சிவராசன், சுபா உட்பட எல்லோரும் தேடுதல் வேட்டையில் தமிழக போலீஸாரால் சுற்றிவளைக்கப்பட்ட போது, தற்கொலை செய்துகொண்டனர். குற்றம் சாட்டப்பட்டவர்களில் மீதியிருந்த 26 பேர் மீதான வழக்கு சென்னை பூந்தமல்லி தடா சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது. 1993ஆம் ஆண்டு தொடங்கிய இந்த வழக்கில் 50 மாதங்கள், 288 சாட்சியங்கள், 3000 அரசுத் தரப்பு ஆவணங்கள், 1000 எதிர்தரப்பு ஆதாரங்கள் என்ற நீண்ட பயணத்துக்குப் பின்னர் 1998இல் தீர்ப்பு வழங்கப்பட்டது.



### 26 பேருக்கு தூக்குத் தண்டனை

குற்றம்சாட்டப்பட்ட 26 பேருக்கும் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது தடா நீதிமன்றம். இந்தத் தீர்ப்பு தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் இந்தியா முழுக்க ஒரு புயலை உருவாக்கியது. சட்ட வல்லுனர்கள், மனித உரிமைகள் ஆர்வலர்கள் திகைத்தனர். ஒரு கொலை வழக்கில் இத்தனை பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது உலக நாடுகள் எதிலும் நிகழாதது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், ராஜீவ்காந்தி கொலை பற்றி விசாரணை நடத்திய ஜெயின் மற்றும் வர்மா விசாரணை ஆணைய அறிக்கைகள், 'விசாரிக்க வேண்டும்' என்று சுட்டிக்காட்டிய பெரும்புள்ளிகள் அனைவரும் சுதந்திரமாகச் சுற்றுக் கொண்டிருக்கும் போது, ராஜீவ் கொலை நடக்கப்போகிறது எனத் தெரியாமல் மாட்டிக்கொண்ட அப்பாவிகள் அனைவருக்கும் மரணதண்டனை என்பது வழக்கு விசாரணையில் ஈடுபட்ட அதிகாரிகளாலே ஏற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது.

தடா நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்ய முடியாது. எனவே, 27.02.98 அன்று உச்ச நீதிமன்றத்தில் 26 பேரின் சார்பில் மேல் முறையீட்டு மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு மீது தீர்ப்பு வழங்கிய உச்ச நீதிமன்றம் நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய 4 பேரின் தூக்கு தண்டனையை உறுதி செய்தும், ஜெயக்குமார், ரவிச்சந்திரன், ராபர்ட் பயாஸ் 3 பேரின் தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தும், மீதமுள்ள 19 பேரை விடுதலை செய்தும் தீர்ப்பளித்தது.

### பக்கத்தில் வந்த தூக்கு கயிறு

தூக்கு தண்டனை உறுதி செய்யப்பட்ட நான்கு பேரும் 7.10.1999 அன்று தமிழக ஆளுநரிடம் கருணை மனு அளித்தனர். அவை நிராகரிக்கப்பட்டன. இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். உயர்நீதிமன்றம், தமிழ்நாடு அமைச்சரவை ஆலோசனையை பெற்று புதிய ஆணை பிறப்பிக்குமாறு ஆளுநருக்கு உத்தரவு பிறப்பித்தது. இதன்படி, அப்போதைய முதலமைச்சர் கருணாநிதி தலைமையில் 19.4.2000 அன்று அமைச்சரவை கூடி விவாதித்தது. 'நளினியின் பெண் குழந்தை அனாதையாகி விடும் என்று முதலமைச்சர் தெரிவித்த கருத்திற்கிணங்க, நளினி ஒருவருக்கு மட்டும் கருணை காட்டி மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கலாம் என்றும் மற்றவர்களைப் பொறுத்தவரை அவர்களது கருணை மனுக்களை நிராகரிக்கலாம் என்றும்' ஆளுநருக்கு ஆலோசனை வழங்க அமைச்சரவை முடிவெடுத்தது. இதற்கு ஆளுநர் ஒப்புதல் அளித்தார். அதன்படி, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 4 பேரில் சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரது தூக்கு தண்டனை உறுதி செய்யப்பட்டது. நளினிக்கு ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.

சாந்தன், முருகன், பேரறிவாளன் மூவரும், 28.4.2000 அன்று, தமிழக அரசு வாயிலாக இந்திய குடியரசு தலைவருக்கு கருணை மனு அனுப்பினர். அந்த மனு மீது 11 ஆண்டுகளாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருந்த நிலையில், 12.8.2011 அன்று அன்றைய இந்திய குடியரசு தலைவர் பிரதிபா பாட்டில் கருணை மனுக்களை நிராகரித்து உத்தரவிட்டார். இதனையடுத்து மூவருக்கும் தூக்கு தண்டனையை நிறைவேற்ற 2011 செப்ரெம்பர் 9 என்று நாள் குறிக்கப்பட்டது.

இதனையடுத்து தமிழ்நாட்டில் பெரும் எழுச்சியை உருவாக்கியது. மூன்று பேரையும் தூக்கு தண்டனையில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்தன. காஞ்சிபுரம் ஓரிக்கையைச் சேர்ந்த 27 வயது செங்கொடி காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக மூவர் மரணத் தண்டனையை எதிர்த்து முழக்கமிட்டபடி தீக்குளித்தார்.

இந்நிலையில், '1991இல் கைது செய்யப்பட்ட நாங்கள் 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் உள்ளோம். எங்கள் கருணை மனுக்கள் மீது பல ஆண்டுகளாக எந்த முடிவும் எடுக்காததால் ஆயுள் தண்டனை காலத்தைவிட அதிக காலம் சிறைத் தண்டனை அனுபவித்து விட்டோம். இவ்வளவு நீண்ட காலம் நாங்கள் சிறையில் வாடிய பிறகும்கூட எங்களுக்கு தூக்கு தண்டனையை நிறைவேற்றுவது என்பது ஒரு குற்றத்துக்கு 2 தண்டனை அளிப்பதாகும். கருணை மனுக்களின் மீதான முடிவுகள் தாமதமானதால் ஏராளமான தூக்கு தண்டனை உத்தரவுகளை உச்ச நீதிமன்றமும் உயர் நீதிமன்றங்களும் ரத்துச் செய்துள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டு எங்களின் தூக்கு தண்டனையை ரத்து செய்ய வேண்டும்' என்று மூவரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இந்தியாவின் பிரபல வழக்கறிஞர்கள் ராம்ஜேத்மலானி, மோஹித் சௌத்ரி, காலின் கோன்சாலின் ஆகியோர் டெல்லியிலிருந்து வந்து

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!

• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# இன்னல் நீக்கும் இயற்கை - 90




இந்த இதழில் மேலும் சில இயற்கை மருத்துவக் குறிப்புகளைக் கவனிப்போம். ஏற்கனவே பல இயற்கை வழிமுறைகள் பற்றி உரையாடியிருந்தாலும் இன்னும் எத்தனையோ தகவல்கள் பற்றி நாளாந்தம் மென்மேலும் அறிய முடிகிறது. அவற்றின் முக்கியத்துவம் கருதி சிலவற்றை இத்தொடர் கட்டுரையில் உரையாடவேண்டும் என்று எண்ணுகின்றேன், என்றும் மருத்துவ ஆலோசனைகள் அவசியமானதாக இருந்தாலும் எமது வாழ்க்கையில் நாளாந்தம் நாம் எதிர்கொள்ளும் ஆரோக்கியம் தொடர்பான சவால்களில் இயற்கை மருத்துவம். வீட்டு மருத்துவம், மாற்றுச் சிகிச்சை முறைகள், சித்த மருத்துவம் போன்றவற்றால் ஏற்படும் நன்மைகள் ஏராளம், ஏராளம். இந்த வகையில் நம்மைச் சூழவுள்ள இயற்கை வழிமுறைகளை நாம் அறிந்துகொள்வது முக்கியமானது என்று கருதி பல துறைசார் நூலாசிரியரின் கருத்துகள் உட்பட பல்வேறு விடயங்களை இத்தொடர் கட்டுரையில் உரையாடி வந்திருக்கின்றோம்.

இதுவரை தொண்ணூறு இதழ்களைத் தாண்டி வந்தாலும் இன்னும் ஏராளமான விடயங்கள் பற்றி உரையாடக் கூடியதாக இருந்தாலும் மீண்டும் கூறியதைக் கூற வேண்டிய நிலை வந்துவிடும் என்பதால் இத்தொடர் கட்டுரையை இந்த இதழுடன் நிறைவிற்குக் கொண்டு வரலாம் என எண்ணுகின்றேன்.

## வாயுத்தொல்லை

வாயுத் தொல்லை ஏற்படும்பொழுது பப்பாளிப் பழத்தில் ஒரு துண்டை எடுத்து சாப்பிட்டால் வாயுத்தொல்லை (Gastric Problem) சீராகும். ஆனால் கர்ப்பிணிப் பெண்கள் பப்பாளிப் பழத்தைச் சாப்பிடக் கூடாது. சீரகம், ஏலக்காய், சோம்பு ஆகியவற்றில் ஏதோ ஒன்றை வாயில் போட்டு மென்று சாப்பிட்டு வந்தாலும் வாயுத் தொல்லை நீங்கும். சீமை சாமந்தி தேனீரும் வாயுத்தொல்லைக்கு மருந்து ஆகும். வாயுத்தொல்லைக்கு நிவாரணமாக வாழைப்பழம் சாப்பிடலாம். தேங்காய்த்துருவல், பேரிக்காய், புதினா இலை ஆகியவற்றில் ஏதோ ஒன்றையும் சாப்பிடும்பொழுது வாயுத்தொல்லை குறையும். புதினா எண்ணெய்யை வெந்நீரில் கலந்து குடித்தால் வாயுத் தொல்லை நீங்கும். 50 கிராம் மிளகுத் தூளை 2 ரம்ளர் நீரில் கலந்து 20 நிமிடம் வரை காய்ச்சி வடிகட்டி மூன்றாகப் பிரித்து மூன்று தடவை குடித்து வந்தால் வாயுத்தொல்லை நீங்கும். வாயுத் தொல்லை நீங்க பெருஞ்சீரகத்தை நீரில் கலந்து சூடாக்கி ஆறவைத்துக் குடிக்கலாம். புரத உணவுகளை அதிகமாகச் சாப்பிடுவதால் வாயுத்தொல்லை அதிகமாகும். எனவே புரத உணவுகளை அதிகமாகச் சாப்பிடும்பொழுது காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றையும் சேர்த்துச் சாப்பிடுவது நல்லது. புரத உணவுகளைப் பொரித்துச் சாப்பிடுவதால் வாயுத்தொல்லை அதிகமாகும். உப்பு, காரம் கூடிய உணவுகளைச் சாப்பிடுவதால் வாயுத்தொல்லை அதிகமாகும். வாயுத்தொல்லையால் வயிற்று வலி ஏற்படும்பொழுது நிவாரணமாக பெருங்காயத்தை நெய்யில் பொரித்துச் சாப்பிட்டால் பலன் கிடைக்கும். இஞ்சி, சுக்கு, கடுக்காய் போன்றவையும் வாயுத் தொல்லைக்கு மருந்தாகும். வெள்ளைப் பூண்டைத் தாச்சியில் போட்டு சிறிது வறுத்துச் சாப்பிட்டால் வாயுத்தொல்லை குறையும். ஒரு மேசைக்கரண்டி எலுமிச்சைச் சாற்றுடன் இரண்டு சிட்டிகை பேக்கிங் சோடாவை நீரில் கலந்து உணவு சாப்பிட்டதும் குடித்தால் வாயுத்தொல்லை ஏற்படாது. திரிபாலாத் தூளை நீரில் கலந்து சூடாக்கி ஆறவைத்துக் குடித்தால் வாயுத்தொல்லை நீங்கும். மோரில் சீரகம் கலந்து குடித்தால் வாயுத்தொல்லை நீங்கும்.

## வயிற்று வலி

ஒரு தேக்கரண்டி கசாகசாவினையும், சிறிதளவு பனங்கற்கண்டினையும் எடுத்துச் சேர்த்துப் பொடியாக்கி மூன்று வேளை உட்கொண்டால் வயிற்றுவலி நீங்கும். நெய்விட்டு வெந்தயத்தை வறுத்துப் பொடியாக்கி மோரில் கலந்து குடித்தால் வயிற்றுவலி நீங்கும். வயிற்றுவலி ஏற்படும் காலத்தில் அதிகளவு நீரைப் பருக வேண்டும். இஞ்சியை இடித்துச் சாறாக்கித் தேனுடன் கலந்து குடிக்கவும். வயிற்று வலியைப் போக்க இளநீர் அருந்தலாம். கற்றாழைச் சாற்றில் சிறிதளவைக்



குடிக்க வயிற்று வலி குறையும். காயவைக்கப்பட்ட வேப்பம் பூவினை வெந்நீரில் கலந்து குடிக்கவும். சாதம் வடித்த நீரில் சிறிதளவு மஞ்சள் தூளினைக் கலந்து குடிப்பதால் வயிற்று வலி குறையும். வெற்றிலையுடன் நான்கு மிளகு சேர்த்துச் சாப்பிட்டால் வயிற்றுவலி குறையும். மிளகு ரசம் வைத்து அருந்துவதால் வயிற்றுவலி குறையும். ஓமத்தூளை நீரில் கலந்து காய்ச்சி ஆறவிட்டுக் குடித்துவர வயிற்றுவலி குறையும். எலுமிச்சம் பழச் சாறினை அருந்துவதாலும் வயிற்றுவலிக்கு நிவாரணம் கிடைக்கும்.

## செரிமானமின்மை அல்லது அஜீரணம்

சீரகத்தை நீரிலிட்டு கொதிக்க வைத்துக் குடித்தால் செரிமானக் கோளாறு நீங்கும். கறிவேப்பிலை, இஞ்சி, சீரகம் ஆகியவற்றைக் கலந்து நீரிலிட்டுக் கொதிக்க வைத்துக் குடித்தால் செரிமானம் சீராகும். ஓமம், கருப்பட்டி ஆகியவற்றைக் கலந்து கசாயம் குடித்தால் செரிமானமின்மை சீராகும். சராசரியாக மனிதன் ஒருவனுக்கு நாளாந்தம் 2000 கலோரி அளவு தேவைப்படும், இதற்கு பல்வேறு வகையான உணவுகளைக் கலந்து சாப்பிட வேண்டும். ஒரு நாளைக்கு 2-3 லீற்றர் நீர் குடிக்க வேண்டும். உணவு சாப்பிட்ட பின்பு எலுமிச்சம் பழச் சாறு குடித்தால் செரிமானம் சீராகும். நாள் தோறும் ஒரு நெல்லிக்காய் சாப்பிட்டு வந்தால் செரிமானம் சீராகவிருக்கும்.

## ஒவ்வாமை

ஒவ்வாமை கோளாறுகளுக்கு மஞ்சள் நல்ல மருந்தாகும். உடலுக்கு அதிக மஞ்சளும் கூடாது என்பதால் அளவாக மஞ்சளை உட்கொள்ள வேண்டும். ஒரு கிலோ உடல் எடைக்கு 0.3 மி.கிராம் என்ற அளவிற்குள் மஞ்சள் உட்கொள்ளும் அளவு இருக்க வேண்டும். உடலில் ஒவ்வாமை அறிகுறிகள் ஏற்படும் இடங்களில் தேங்காய் எண்ணெய் பூசி வரக் குணமாகும். கற்றாழை, பேக்கிங் சோடா போன்றவையும் ஒவ்வாமை நீங்க உதவும். வேப்பம் பூவினை நீரில் போட்டு கொதிக்க வைத்துக் குடிப்பதால் ஒவ்வாமைக் கோளாறுகள் சீராகும். வெற்றிலை, மிளகு ஆகியவற்றை நீரில் கொதிக்க வைத்துக் குடிக்க வேண்டும். ஒவ்வாமைக்குத் தண்ணீர் கொடுக்கலாம். உடனடியாக வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லவேண்டும். சுவாசம் தடைபடாமல் மீள்திரும்பும் நிலையில் எடுத்துச் செல்லவும் சுவாசம் தடைப்படுமாயின் மீளுயிர்ப்புச் சுவாசம் வழங்கவும். காற்றினோடு தொடர்பு ஏற்படக்கூடிய இடங்களான கண், மூக்கு, நுரையீரல் போன்ற இடங்களில் ஒவ்வாமை விளைவுகள் பெரிதும் காணப்படும். ஒவ்வாமை இலிருந்து பல இயற்கை வழிமுறைகள் இருந்தாலும் மிகவும் கவனமாக மருத்துவ ஆலோசனையுடன் ஒவ்வாமைக்கு நிவாரணம் தேடவேண்டியது மிகவும் முக்கியமானது. ஒவ்வாமை உயிரையே பறித்து விடும் தன்மை கொண்டதால் அதிக எச்சரிக்கையுடன் கையாள வேண்டும்.

### அன்பான விளம்பரம் வாசகர்களே!

இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலால் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர்கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இக்கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக் கேற்ப பொருத்தமான மருத்துவக் கருத்துக்களாக அமைந்து விடாது என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

நாற்பத்தைந்து மாதங்கள், தொண்ணூறு இதழ்கள் மூலமாக இந்தொடர் கட்டுரை மூலமாக உங்களுடன் உரையாடும் அரிய வாய்ப்பினை வழங்கிய விளம்பரம் பத்திரிகை நிறுவனத்தினருக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். என்றும் என்னை ஊக்கப்படுத்தும் வாசகர்களாகிய உங்கள் அனைவருக்கும் எனது நன்றி. மேலும் ஒரு புதிய தலைப்பில் உங்களுடன் உரையாட ஆவலுடன் காத்திருக்கின்றேன். வழமைபோன்று இத்தொடரில் உரையாடிய விடயங்கள் வகைதொகை செய்யப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு நூலுருவில் வெளிக்கொண்டு வருவதற்கு முயற்சிப்பேன். இத்தொடர் கட்டுரை தொடர்பான உங்கள் எண்ணங்களையும் தெரியப்படுத்துங்கள்.

மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன். நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். (முற்றும்)

---

# 1986ஆவது...

06 ஆம் பக்கத் தொடர்ச்சி

லெப்டினென்ட் ஜெனரல் பின்னர் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்ட நளின் செனிவிரத்ன, பிரிகேடியர் டென்சில் கொப்பேகடுவ, கேணல். விஜயவிமலரத்ன, மேஜர். கோட்டாபய ராஜபக்ச, மேஜர்.சரத் பொன்சேகா, பிறிகேடியர்.ஜி.எச்.டீ.சில்வா, கேணல் லக்கி ராஜசிங்க, லெப்டினன்ட் கேணல். நூரத விக்கிரமரத்தின போன்ற இராணுவ உயர்அதிகாரிகள் பங்கேற்றிருந்தமையைக் கொண்டு வடமராட்சி மீதான இந்தப் போரின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளலாம். பலாலி கூட்டுப் படைத்தளத்தில் இருந்து, விமானம், தரை வழி மற்றும் கடல்வழித் தாக்குதல்கள் என மும்முனைகளிலும் படையினர் முன்னேறிச் சென்றனர். படையினர் வெறிகொண்டவர்களாக முன்னேறிச் செல்லும் வழிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்களையும் கைதுசெய்து பருத்தித்துறை துறைமுகத்தில் ஏற்கனவே தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த கப்பலில் ஏற்றிப் புதிதாக இதற்காகவே காலியில் உள்ள பூசா என்ற இடத்தில் தமிழரைத் தடுத்துவைத்துச் சித்திரவதை செய்வதற்காகவே திறக்கப்பட்ட தடுப்புமுகாமுக்கு ஏற்றிச்சென்றனர். அங்கே கொண்டு செல்லப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்களில் முப்பந்தைந்து இளைஞர்கள் இதுவரை திரும்பவேயில்லை.

# தேர்தல்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆளும்கட்சியாக இருந்த லிபரல் கட்சி ஒன்ராறியோ மாகாணச் சரித்திரத்திலேயே மிகவும் மோசமாக வீழ்ச்சியடைந்து 7 ஆசனங்களை மட்டுமே பெற்றது. இம்முறை சட்டமன்றத்தில் லிபரல் கட்சி மூன்றாம் இடத்திற்கு வந்தாலும் அது 24 ஆசனங்களைப் பெற வாய்ப்புள்ளதாக CBC ஊடகத்தின் கருத்துக்கணிப்பு கூறுகிறது.




பசுமைக்கட்சிக்கு மக்களிடையே செல்வாக்கு கடந்தமுறை நடைபெற்ற தேர்தலைவிட இப்போது அதிகரித்திருந்தாலும் அது பசுமைக்கட்சிக்கு அதிகஅளவு ஆசனங்களைப் பெற்றுத் தரமாட்டாது. பசுமைக்கட்சி இம்முறையும் ஓர் ஆசனத்தைத்தான் பெறும் என CBC ஊடகத்தின் கருத்துக்கணிப்பு கூறுகிறது.



மாகாணம் தழுவிய கருத்துக் கணிப்புகள் இவ்வாறிருக்க ரொறொன்ரோ பெரும்பாகத்தில் [GTA] கருத்துக் கணிப்பு சற்று வித்தியாசமாக இருக்கிறது என Nanos ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. அதாவது ஒன்ராறியோ மாகாணம் தழுவிய கருத்துக்கணிப்பில் லிபரல் கட்சியை விட 9% அதிகப்படியான ஆதரவை பழமைவாதக்கட்சி பெற்றுள்ளது. ஆனால் GTAயில் லிபரல் கட்சியை விட 4% அதிகப்படியான ஆதரவையே பழமைவாதக்கட்சி பெற்றுள்ளது. இதேவேளை GTAஇற்கு வெளியில் லிபரல் கட்சியைவிட 15% அதிகப்படியான ஆதரவை பழமைவாதக்கட்சி பெற்றுள்ளது.



Nanos ஆய்வு நிறுவனம் நடத்திய இன்னொரு கருத்துக்கணிப்பில் ஒன்ராறியோ வாக்காளர்களில் 34% ஆனோர் தங்களது முதல்வராகப் பழமைவாதக்கட்சியின் தலைவர் டக் ஃபோர்ட் [Doug Ford] வருவதை விரும்புகின்றனர். 23%ஆனோர் தங்களது முதல்வராக லிபரல் கட்சியின் தலைவர் Steven Del Duca வருவதை விரும்புகின்றனர். 18% ஆனோர் தங்களது முதல்வராகப் புதிய ஜனநாயகக்கட்சியின் தலைவர் Andrea Horwath வருவதை விரும்புகின்றனர்.



இம்முறை நடைபெற உள்ள தேர்தலில் மக்களின் மிக முக்கிய கவனத்தைப் பெற்ற விடயங்களைப் பற்றி Nanos ஆய்வு நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பில் 25% ஆனோர் உடல்நலம், சுகாதார வசதி முக்கிய இடத்தைப் பெறுவதாகத் தெரிவித்திருந்தனர். அதை அடுத்து 19%ஆனோர் வாழ்க்கைச் செலவு, பணவீக்கம் தமக்கு முக்கிய இடத்தைப் பெறுவதாகத் தெரிவித்திருந்தனர். இவற்றை விட 10%ஆனோர் சுற்றுப்புறச்சூழல், 7%ஆனோர் வீட்டுவிலை மற்றும் 5% கல்வி தமக்கு முக்கிய இடங்களைப் பெறுவதாகத் தெரிவித்திருந்தனர்.

## கனடியப் பழமைவாதக் கட்சித்தலைவர் தெரிவு!

கனடியப் பழமைவாதக்கட்சியின் தலைவர் பதவிக்குப் போட்டியிடுவோரின் பெயர்கள் தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது.

1. Pierre Poilievre
2. Patrick Brown
3. Jean Charest
4. Leslyn Lewis
5. Roman Baber
6. Scott Aitchison



இந்த ஆறுபேரும் ஆங்கில மொழி மூலம் நடைபெற்ற விவாதத்தில் மே 11ஆம் திகதியும், பிரெஞ்சு மொழி மூலம் நடைபெற்ற விவாதத்தில் மே 25ஆம் திகதியும் கலந்து கொண்டனர். கனடியப் பழமைவாதக் கட்சியின் தலைவர் தெரிவு 2022 செப்ரெம்பர் 10ஆம் திகதி நடைபெற உள்ளது.

ஆங்கில மொழி மூலம் நடைபெற்ற விவாதம் ஒரு விவாத அரங்கு போல் இல்லாமல் இந்த ஆறு வேட்பாளர்களையும் கனடியப் பழமை வாதக்கட்சி உறுப்பினர்களுக்கும் மற்றும் கனடியப் பொதுமக்களுக்கும் அறிமுகப்படுத்தும் அரங்கு போல் இருந்தது எனப் பல ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

பிரெஞ்சு மொழி மூலம் நடைபெற்ற விவாதம் சற்றுக் காரசாரமான விவாதமாக இருந்தாலும் அதில் பிரெஞ்சு மொழியை சரளமாகப் பேச வல்லமை உடைய Pierre Poilievre, Jean Charest மற்றும் Patrick Borwn ஆகிய மூவருமே விவாதத்தில் பெரும்பங்கு எடுத்துக் கொண்டனர்.

விவாத ஆரம்பத்தில் இருந்து Patrick Brown தொடர்ந்து சரமாரியாகத் தாக்குதல்களை Pierre Poilievre மீது நடத்திக் கொண்டிருந்தார் என CBC ஊடகம் தெரிவித்தது.

தொடர்ந்து இனவெறி அறிக்கைகளை வெளியிட்டு வந்த சுதந்திரத்திற்கான பாரவூர்திகளின் அணிவகுப்பை நடத்திய Pat King போன்ற குற்றவாளி எனக் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு Pierre ஆதரவளித்து வந்தார் எனவும், பொதுமக்களை தமது பணத்தை Bitcoin போன்ற இணையதளத்தில் பாவிக்கப்படும் Cryptocurrencyஇல் முதலிடுமாறு Pierre மிகவும் மோசமான நிதி ஆலோசனை அளித்து வந்தார் எனவும் Patrick குற்றம் சாட்டினார். Bitcoin நாணயம் 2021 நவம்பரில் இருந்த பெறுமதியில் 50%ஐ தற்போது இழந்துள்ளது. பணவீக்கத்தில் இருந்து தப்புவதற்கு கனடியர் Bitcoin நாணயத்தில் முதலிட வேண்டும் என Pierre கூறியதை Patrick நினைவூட்டினார். அவ்வாறு Pierre இன் ஆலோசனைப்படி கனடிய முதியோர் நடந்திருந்தால் அவர்கள் தங்களது சேமிப்பு முழுவதையும் தற்போது இழந்திருப்பர் என Patrick கூறினார். El Salvador நாடு, கடந்த வருடம் தமது நாட்டின் உத்தியோக பூர்வ நாணயமாக Bitcoinஐ ஏற்ற மாதிரி கனடாவும் செய்திருந்தால் தற்போது நாடு திவாலாகி விட்டிருக்கும் [insolvency] என்றார்.

Pierre Poilievre சுதந்திரத்திற்கான பாரவூர்திகளின் அணிவகுப்பை தான் ஆதரித்ததாகவும் Pat Kingஐ ஆதரிக்கவில்லை என்றார். அத்துடன் Pierre கனடிய மத்திய அரசின் கட்டாய தடுப்பூசி போடுதலுக்குத் தான் எதிர்ப்புத் தெரிவிக்கவே

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)



# 7 பேர்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

இதற்காக வாதாடினர். இந்த வழக்கில் தீர்ப்பளித்த சென்னை உயர்நீதிமன்றம், 'மூவரையும் எட்டு வாரங்களுக்குத் தூக்கி லிடக்கூடாது' என்று இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டது. கொஞ்சம் ஆசுவாசமளித்தது.

### ஆயுள் தண்டனையாக மாற்றம்

இதன்பின்னர் தமிழ்நாடு முதலமைச்சரான ஜெயலலிதா, 'மூன்று பேர் தூக்குத் தண்டனை தமிழ்நாடு மக்களை பெரும் வேதனையில் ஆழ்த்தியுள்ளது. மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இவர்கள் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றுமாறு குடியரசுத் தலைவரை இந்த சபை கேட்டுக் கொள்கிறது' என்கிற தீர்மானத்தை, 30.8.2011 அன்று தமிழ்நாடு சட்ட மன்றத்தில் நிறைவேற்றினார்.

அதேநேரம்; தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்ற மேல்முறை யீட்டில், தமிழ்நாட்டைச் சேர்ந்த ப. சதா சிவம் உட்பட 3 நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வு, 2011 பிப்ரவரி 18ஆம் திகதி, மூவரின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து தீர்ப்பளித்தது.

மட்டுமல்லாமல் அந்தத் தீர்ப்பின் இறுதியில், "ஆயுள் தண்டனை என்றால் ஆயுள் வரைதான். ஆனாலும், அது குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 432இன் கீழ் வழங்கப்படும் தண்டனைக் குறைப்புக்கு உட்பட்டதுதான். எனவே, 432ஆவது பிரிவின்படி இவர்களை விடுதலை செய்வது குறித்து தமிழ்நாடு அரசு முடிவு செய்யலாம். ஆனால், அந்தப் பிரிவு 433 யன் கீழ் உள்ள கட்டுப்பாட்டுக்கு மீறாமல் இருக்க வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தது.

உச்சநீதிமன்றத் தீர்ப்பை அடுத்து, அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையில் கூடிய தமிழ்நாடு அமைச்சரவை ஏழு பேரையும் விடுதலை செய்யலாம் என்று முடிவெடுத்தது. "இருப்பினும், இந்த வழக்கு ஒன்றிய புலனாய்வு அமைப்பினால் புலனாய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் தடா நீதிமன்றத்தில் தண்டனை வழங்கப்பட்ட தால், குற்ற விசாரணை முறைச் சட்டம் 435-இன்படி, தமிழ்நாடு அமைச்சரவையின் முடிவு குறித்து ஒன்றிய அரசுடன் கலந்தாலோசிக்கப்பட வேண்டும். ஒன்றிய அரசு 3 நாட்களுக்குள் தனது கருத்தினைத் தெரிவிக்காமல் காலம் தாழ்த்தினால், குற்ற விசாரணை முறைச் சட்டம் 432இல் மாநில அரசுக்கு அளிக்கப் பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி ஏழு பேரும் விடுவிக்கப் படுவர்" என்று ஜெயலலிதா அறிவித்தார்.

ஆனால், தமிழ்நாடு அரசின் கோரிக்கைக்கு அன்று ஒன்றியத்தில் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் அரசு ஒப்புதல் வழங்காததோடு, தமிழ்நாடு அரசுக்கு அந்த அதிகாரம் இல்லை என்று உச்சநீதிமன்றத்திலேயே ஒரு மனுவினைத் தாக்கல் செய்தது. இடையில் ஒன்றியத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிதாக வந்த பாஜக அரசும் அதே நிலைப்பாட்டில் நின்று உச்ச நீதிமன்றத்தில் கடுமையாக வாதாடியது. இதனையடுத்து, "ஒன்றிய இந்திய உச்சநீதிமன்றத்தில் அறிக்கை அளித்தார்.

### உச்ச நீதிமன்றம் சென்ற பேறிவாளன்

இதனையடுத்து, குற்றமே நிரூபிக்கப்படா மல் 30 ஆண்டுகளாக சிறையில் உள்ள தன்னை விடுதலை செய்யக்கோரி கடந்த 2020ஆம் ஆண்டு பேறிவாளன் வழக்கு தொடர்ந்தார்.



புலனாய்வு அமைப்பான சிபிஐ விசாரித்த வழக்குகளில் குற்றவாளிகள் என்று கண்டறியப்பட்டவர்களுக்கு மன்னிப்பு வழங்குவது தொடர்பிலான இறுதி முடிவை ஒன்றிய அரசே எடுக்க முடியும். அவர்களை விடுவிப்பதா இல்லையா என முடிவு செய்யும் அதிகாரம் ஒன்றிய அரசுக்கு மட்டுமே உள்ளது. குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டவர் களை தமிழ்நாடு அரசு தன்னிச்சையாக விடுவிக்க முடியாது" என்று இந்த வழக்கில் நீதிபதி தத்து தலைமையிலான ஐந்து பேர் கொண்ட அமர்வு தீர்ப்பளித்தது.

விடுதலையின் வாசல் வரை சென்றுவிட்ட நிலையில் தடைபட்டு, கிட்டத்தட்ட முடிந்து விட்டது என்று நம்பிக்கை யிழந்து இருந்த நிலையில், 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் தேர்தலுக்கு முன்பு, இந்த விவகாரத்தை மீண்டும் கையிலெடுத்தார் ஜெயலலிதா.

"முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள நளினி உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்ய தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக ஒன்றிய அரசு தனது கருத்தை தெரிவிக்க வேண்டும்" என்று தமிழக அரசு கடிதம் எழுதியது.

### வந்தது, விதி 161

இந்திய அரசியலைப்பு சட்டம் மாநில ஆளுநருக்கு அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு 161 கீழும், குடியரசுத் தலைவருக்கு பிரிவு 72இன் கீழும், தண்டனையைக் குறைக்க, ரத்து செய்ய, மன்னிக்க அளவில்லாத அதிகாரம் வழங்குகிறது. இதனடிப்படையில் 2018 செப்ரெம்பர் 9 அன்று சாந்தன், முருகன், பேறிவாளன், நளினி, ரவிச்சந்திரன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய 7 பேரையும் விடுவிக்க தமிழ்நாடு அமைச்சரவை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி தமிழ்நாடு ஆளுநருக்கு அனுப்பியது. ஆனால், அதன்மீது 2 ஆண்டுகளாக முடிவெடுக்கா மல் இருந்த ஆளுநர் குடியரசு தலைவருக்கே அதிகாரம் உள்ளதாக ஒன்றிய உள்துறை அமைச்சகம் மூலமாக

இந்த வழக்கில் அனைத்து தரப்பு வாதங்களும் முடிவடைந்த நிலையில் 18 மே 2022 அன்று இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 142இன்படி சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்திய உச்ச நீதிமன்றம் பேறிவாளனை விடுதலை செய்தது.

பேறிவாளன் விடுதலை அவருடன் நிற்காமல் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் 31 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்துவரும் மீதமுள்ள ஆறு பேர் விடுதலைக்கும் வழி வகுத்துள்ளது. எனவே, அவர்கள் விடுதலை விரைவில் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

### மீட்கப்பட்ட மாநில உரிமை

பேறிவாளன் விடுதலை வழக்கு தீர்ப்பில் இந்தியாவில் மாநிலங்களின் உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் இந்த வழக்கு இந்திய நீதி அமைப்பு, சட்டம், அரசியல், நிர்வாகவியல் மற்றும் வரலாற்றில் இடம்பெறத்தக்க முக்கிய தீர்ப்பாகவும் அமைந்துள்ளது.

இந்திய நீதி அமைப்பில் சிறைவாசிகளுக்கு மன்னிப்பு அளிப்பதைப் பொறுத்தமட்டில் கூடுதல் பங்கு மாநில அரசுக்குத்தான் வழங்கப்பட்டுள்ளது. சிறை வாசி தண்டனைக் காலத்தில் எத்தகைய மாற்றம் அடைந்துள்ளார், இக்கால கட்டத்தில் அவரது நடவடிக்கைகள் எவ்வாறு இருந்துள்ளன மற்றும் அவரது குடும்ப நிலை, குழந்தைகள் நிலை முதலியவற்றைக் கணக்கில் கொண்டு விடுதலை அளிக்கும் உரிமையும் திறனும் மாநில அரசுக்கு உண்டு. ஆனால், பேறிவாளன் வழக்கில் தமிழ்நாடு ஆளுநர் சார்பாக வாதாடிய இந்திய ஒன்றிய அரசு இதில் முடிவெடுக்கும் அதிகாரம் ஒன்றிய அரசுக்குதான் உண்டு என்று மீண்டும் மீண்டும் குறிப்பிட்டது. இந்த வாதத்தை நிராகரித்ததுடன், அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 161இன் கீழ் கருணை காட்டும் அதிகாரத்தை ஆளுநர் தன்னிச்சையாகப் பயன்படுத்த முடியாது என்றும், மாநில அமைச்சரவை யின் ஆலோசனை அவரைக் கட்டுப் படுத்தும் என்றும் நீதிபதிகள்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)




# பள்ளி பருவம் இனியும் வருமோ

கும் இருட்டினில் குப்பி விளக்கின் கீறல் ஒளியில்
பின் இரவு பத்துமணிவரை அம்மாவின் கற்பித்தலில்
நூலாகி சோர்வாகி தூக்கத்திற்கு சென்று விடிந்ததும்
இரவு போதை முறிந்து எழுந்த அப்பரின் சத்தம் கேட்டு
நான் துடித்து எழும்ப புருசனிடம் அடிவாங்கி
நொந்தும் பிள்ளை மீதான வாஞ்சையில் கிழிந்த போன
என் காற்சட்டைக்குத் தையலும் போட்டு அணிந்து
பொத்தான் இல்லா சட்டைக்கு ஊசிகுத்திப் போட்டுவிட
எண்ணை வழியும் தலையோடு பக்கத்து வீட்டு
புவனேசோடு சூது வாது எதுவும் இல்லாது கை
கோர்த்து பெத்தாச்சியின் மடிப்பெட்டியில்
களவெடுத்த ஐந்து சதத்து பகோடாவை நொறுக்கி
சுவைத்த வண்ணம் படிக்கப் பள்ளிசென்ற நாட்களும்!

பள்ளித்தோழன் தேவனும் நானும் பள்ளி செல்வது
போல் நடித்துக் குளக்கரைப் புதருக்குள் புத்தகப் பையை
மறைத்து வைத்து பஸ் பிடித்து யாழ். ராணி தியேட்டரில்
வாத்தியார் படம் பார்த்துத் திரும்புகையில் பக்கத்து
வீட்டுத் தம்பரிடம் அகப்பட்டு அப்பரிடம்
பூவரசம் தடியினால் செம்மையாய் அடி வாங்கிகட்டி நாளும்!

எம்கூட படித்த வாசுகியையும் பூரணியையும்
இவள் எனக்கு அவள் உனக்கு எனக் கற்பனைக் காதலில்
மூழ்கிப் புரியாத இன்பத்தில் திளைத்து! அருவரி தொடக்கம்
உயர்வகுப்புவரை இன மத சாதி கடந்து இரண்டறக்
கலந்து மாணவத் தோழராய் தோழியாய் கற்று
மாறும் பள்ளிகள் வேறாகும் இடங்கள் எனப் பிரியும்
வேளைகளில் கட்டியணைத்துக் கண்கள் கலங்கிய
துன்ப நாட்களும்!



எங்கட ரீச்சர் நம்ம வாத்தியார் என சொந்தம்
கொண்டாடி அவையளுக்கும் ஏற்ற ஒவ்வோர்
பட்டப்பெயர் சூட்டி வாங்குகள் கரும் பலகைகளில்
சோக்கட்டியினால் எழுத பக்கத்து வகுப்பு தடியனின்
காட்டிக் கொடுப்புத் துரோகத்தால் மணிக்கணக்காக
மேசை மேல் முழங்காலில் நின்று அதிபரிடம்
தண்டனை பெற்ற நாட்களும்!

மாரிகால மழை வெள்ளம் குளங்கள் வயல்கள்
யாவும் நிரம்பி வரம்புகளில் மேவிப்பாயும்
தண்ணீரை எம் கால்களினால் மடித்தடித்து
ஒவ்வொருவர் மீதும் நீரைப்பீய்ச்சி ஈரஉடையோடு
பள்ளி நுழைய பார்வதி ரீச்சரிடம் பிரம்படி
வாங்கிய நாட்களும்!

இடைவேளை நேரம் முத்தர் கடையில் கால்பானும்
வாழைப்பழம்ரெண்டும் பத்து சதத்தில் பசியாறி
வெறுப்போடு ஆங்கிலம், புவியியல் பாட வகுப்பில்
படிக்கச் சிறிதும் மண்டைக்குள் ஏறவே முடியாமல்
கொதியன் மாஸ்டரிடம் தலையில் குட்டும் வாங்கி
மக்குப்பட்டம் பெற்ற சம்பவமும்!

முன்னாள் மாணவர்கள் இப்பொழுது வித்தியாசமானவர்கள்
பெற்றவர்கள் ஆசிரியப் புனிதர்கள் இவர்களது
மூர்க்கமும் ஊக்கமும் உத்தியும் எங்களை
உன்னத உயர்ந்த உற்ற நல்ல பிரஜைகள்
ஆக ஆக்கிய போதுதான் அவர்களை தாழ் பணிந்தோம்!



ச.அன்ரன் இராசநாயகம்

வெற்றியோ தோல்வியோ உன் பாதையை நீயே தேர்வு செய்!
வெற்றி கிடைத்தால் பெற்றுக்கொள்.
தோல்வி கிடைத்தால் கற்றுக்கொள்.

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

## தேர்தல்...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

சுதந்திரத்திற்கான பாரவூர்திகளின் அணிவகுப்பை ஆதரித்ததாகக் கூறினார். தனது ஆதரவாளர்களை Bitcoin நாணயத்தில் தான் முதலிடுமாறு கூறவில்லை என்றார்.

இதற்குப் பதிலளித்த Patrick Brown, கனடிய மத்திய அரசின் கட்டாய தடுப்பூசி போடுதலுக்கு கோவிட்-19 பெருந்தொற்று நோய்ப்பரவல் காலத்தில் Pierre எதிர்ப்புத் தெரிவிக்க வில்லை. அக்காலப் பகுதியில் Pierre 3,000இற்கு மேற்பட்ட குறுஞ் செய்திகளை ருவிட்டரில் (Twitter) வெளியிட்டவர். அதில் ஒன்றில் கூட கட்டாயத் தடுப்பூசி போடுதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. பின்னர் சுதந்திரத்திற்கான பாரவூர்திகளின் அணிவகுப்பு ஒருபகுதி மக்களிடையே ஆதரவு பெறத் தொடங்கியவுடனேயே தான் கட்டாயத் தடுப்பூசி போடுதலுக்கு எதிர் என்ற நிலையை Pierre எடுத்தவர் என்றார்.

Pierre Poilievreஇற்கு நிதிப்பராமரிப்புப் பற்றிய அறிவு இல்லை என Jean Charest குற்றம் சாட்டினார். அவர்




பிரதமராகப் பதவிக்கு வந்தவுடன் கனடிய வங்கியின் ஆளுநர் Tiff Macklemஐ பதவி நீக்கம் செய்வேன் என ஆங்கில விவாதத்தின்போது கூறினார். கனடாவில் சுதந்திரமாக இயங்கும் கனடிய வங்கியை தனது அரசியல் பேச்சில் எடுத்தது Pierreஇற்கு நிதிப்பராமரிப்பு பற்றித் தெரியாது என்பதைக் காட்டுகிறது என்று Jean கூறினார்.

## 7 பேர்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

வலிறுத்தியுள்ளனர்.

இதற்காக நீதிபதிகள், தங்கள் தீர்ப்பில் 'மாரு ராம்' என்ற வழக்கை சுட்டிக்காட்டி உள்ளனர். 'Maru Ram vs Union of india 1980' என்ற இந்த வழக்கு குற்றவாளிக்கு கருணை காட்டும் இந்திய குடியரசு தலைவருடைய அதிகாரம் குறித்து பேசக்கூடியது.



இந்திய ஒன்றிய அரசின் சட்டத்திற்கு எதிராக ஒருவர் குற்றம் இழைத்து தண்டனை பெற்று இருந்தாலும், இராணுவ நீதிமன்றத்தால் தண்டனை பெற்று இருந்தாலும் அவர்களுடைய தண்டனையை குறைக்கும் அதிகாரத்தை, இந்திய அரசியல் சாசன பிரிவு 72 இந்திய குடியரசுத் தலைவருக்கு வழங்கு கிறது. இந்த அதிகாரத்தை பயன்படுத்தி ஒருவருக்கு மன்னிப்பு வழங்கவோ, தண்டனை குறைப்பு செய்யவோ, தண்டனையை இடை காலமாக நிறுத்தி வைக்கவோ, வேறு ஒரு தண்டனையாக மாற்றவோ குடியரசு தலைவர் உத்தரவிடலாம்.

ஆனால், இதற்காகக் குடியரசுத் தலைவருக்கு கருணை மனுக்கள் அனுப்பி வைக்கப்படும் பொழுது அது ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் வழியாக மட்டுமே அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிறகு சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கத்துடனும் கலந்தாலோசிக்க வேண்டும். இவ்வாறு கலந்தாலோசித்து அதற்குப் பிறகு உள்துறை அமைச்சகத் தால் பரிந்துரை செய்யப்பட்டு அந்தப் பரிந்துரையின் அடிப்படையிலேயே குடியரசு தலைவர் முடிவெடுக்க வேண்டும்.

அதாவது, அரசியல் சாசன பிரிவு 72-ஐ பயன்படுத்தி குடியரசுத் தலைவர் கருணை காட்டும்பொழுது, ஒன்றிய அரசாங்கத்தின் அறிவுரையைப் பெற்று அதன்படி நடக்க வேண்டுமே தவிர தனது சொந்த யோசனையின்படி நடக்க முடியாது. ஒன்றிய அரசாங்கத்தின் முடிவிற்கு குடியரசுத் தலைவர் கட்டுப்பட்டவர் ஆகிறார்.

இதே சட்டப்பிரிவை பேரறிவாளன் விவகாரத்தில் பொருத்திப் பார்த்து தமிழ்நாடு ஆளுநர் தமிழ்நாடு மாநில அமைச்சரவையின் முடிவிற்குக் கட்டுப் பட்டவர் என்ற முக்கிய தீர்ப்பை தற்போது இந்திய உச்சநீதிமன்றம் வழங்கியுள்ளது. இந்தத் தீர்ப்பு மூலம் இந்தியாவில் மாநில அரசின் அரசியல், கொள்கை முடிவுகளில் தனது அதிகார எல்லைகளைத் தாண்டி ஆளுநர்கள் தலையிட அதிகாரம் இல்லை என்பது மீண்டும் உறுதியாகி இருக்கிறது.

இந்த மாநில உரிமை மீட்பு, பேரறிவாளன் வழக்கால் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்லாமல் இந்தியா முழுமைக்கும் மாநில சுயாட்சி - கூட்டாட்சித் தத்துவத்துக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.



# பொன்னியின் செல்வனில் செய்யுள் இலக்கியம்


ஆரணி ஞானநாயகன்

"பொன்னார் மேனியனே
 புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல்
 மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே"

என்பது, திருமழபாடியில் சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய தேவாரம். இதைப் பாடுவதுடன், சோழ நாட்டை ஆண்ட உத்தமசோழரை, ஆசிரியர் "கல்கி" கிருஷ்ணமூர்த்தி தனது 'பொன்னியின் செல்வன்' தொடர்கதையில் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துகிறார்.

இக்காலத் தமிழ் இலக்கியத்தில் மிகப் பிரபலமான கதையான 'பொன்னியின் செல்வனுக்கு' நீண்ட அறிமுகம் தேவை யில்லை. சுந்தர சோழர் என்ற இரண்டாம் பராந்தகன், அவரது மூத்த மகனான ஆதித்த கரிகாலன் என்ற இரண்டாம் ஆதித்தனும், அவரது இளைய மகனான இராஜராஜ சோழன் எனப் பெயர் பெற்ற அருள்மொழிவர்மன் ஆகியோரைப் பற்றி யும், மதுராந்தகன் என்ற உத்தமசோழன் உட்பட வேறு பல வரலாற்று நாயகர்கள் பற்றியும், கல்வெட்டுகளிலும், செப்பேடு களிலும், இலக்கியங்களிலும் செய்திகள் உள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு, ஆசிரியர் கல்கி அவரது புனை கதையை அமைத்தார்.

ஆனால் பொன்னியின் செல்வனில் தமிழ் இலக்கியத்திற்கு இதைவிடப் பெரிய பங்கு இருந்தது. கூத்து, காப்பியம், திரைப்படம் என்ற பல வடிவங்களில் தமிழ் மக்கள் தமது கதைகளையும் கருத்துகளையும் பகிர்ந்து வருகின்றனர். இவை எல்லாவற்றி லும் பாடல்களுக்கு இடமளிக்கப்படுகின் றன. இவ்வழியில், கல்கியும் 'பொன்னியின் செல்வனில்' 57 பாடல்களைச் சேர்த்துள்ளார்.

293 அத்தியாயங்களில் எந்தெந்தப் பாடல்களை எங்கெங்கே ஆசிரியர் சேர்த்துள்ளார் என்பதைப் பார்க்கும்முன், அவற்றை ஏன் அவர் சேர்த்துள்ளார் என்று ஆராய வேண்டும். சில கதைகள் செய்யுட்கள் மூலமாகக் கூறப்படுகின்றன. 'பொன்னியின் செல்வனோ', ஐந்து ஆண்டுகளாக 'கல்கி' வார இதழில் வெளியிடப்பட்ட உரைநடைத் தொடர்கதை. எனவே, 57 பாடல்களும் உரைநடையில் சேர்க்கப்பட்ட விதங்களைப் பார்க்க வேண்டும். ஒரு விதத்தில் பாடல்கள், கதாபாத்திரங்களால் பாடப்பட்டோ, கேட்கப்பட்டோ வரும். மற்ற முறையில் பாடல்கள், வாசகர்களுக்கு மட்டுமே தெரியும். அதாவது, இவை ஆசிரியர் கூற்றில் வருபவை. இருவிதமாக சேர்க்கப் பட்டுள்ள இந்தப் பாடல்கள் நான்கு காரணங்களுக்காகச் சேர்க்கப்பட்டுள்ளன.

சில பாடல்கள் உண்மையான வரலாற்றைப் பற்றியும், வேறு சில கதை நிகழும் இடங்களைப் பற்றியும் விபரிக் கின்றன. இவ்விரண்டு வகைப் பாடல்களில் பெரும்பாலானவை ஆசிரியர் கூற்றில் வருகின்றன. பல பாடல்கள் வழிபாடு, பொழுதுபோக்கு மற்றும் கலை நிகழ்ச்சிகள் போன்ற கதை நிகழ்வுகளில் பாடப்படுகின்றன. மீதியுள்ள பாடல்கள், கதாபாத்திரங்களுக்கு இடையில் நிகழும் உரையாடல்களில் வருகின்றன.


இனி, இந்த நான்கு சந்தர்ப்பங்களில் எந்தெந்தப் பாடல்களை ஆசிரியர் கல்கி பயன்படுத்தியுள்ளார் எனப் பார்க்கலாம்.

## வரலாற்றுச் செய்திகள்

'பொன்னியின் செல்வன்' கதையின் அடிப்படையை அமைக்க ஆசிரியர் செய்த ஆராய்ச்சிக்கு அடையாளமாக, அவர் சேர்த்த பாடல்கள் அமைகின்றன. விக்கிரம சோழர், விஜயாலய சோழர், இரண்டாம் பராந்தகன், கண்டராதித்த சோழன் ஆகிய சோழ மன்னர்களைப் பற்றிய பாடல்கள் 'பொன்னியின் செல்வனில்' இருக்கின்றன. இவற்றில் பல ஆசிரியர் கூற்றில் வந்தாலும் சில, புலவர்கள் சபையில் சுந்தரசோழரை வாழ்த்தும் போதும், மீதி கதாபாத்திரங் களுக்கு இடையில் உள்ள உரையாடல் களின் போதும் பாடப்படுகின்றன. இப்பாடல்கள் ஒட்டக்கூத்தர், புத்தமித்திரர் மற்றும் கண்டராதித்தர் ஆகியோரால் இயற்றப்பட்டன. கண்டராதித்த சோழன் தன்னைப் பற்றி திருவிசைப்பாவில் பாடியது குறிப்பிடத்தக்கது. இவற்றுடன், முக்கிய கதாபாத்திரமான வந்தியத்தேவன் சேர்ந்த வாணர் பரம்பரையைப் பற்றிய பாடல்களும் உள்ளன.

"சேனை தலையாக்கி செங்குருதி நீர்தேக்கி
ஆனை மிதித்த அருஞ்சேற்றில் மானபரன்
பாவேந்தர் தம்வேந்தன் வாணன் பறித்து நட்டான்
மூவேந்தர் தங்கள் முடி!"

என்று வாணர் வேந்தன் ஏகம்பவாணனின் மனைவி இயற்றிய பாடல் சேர்க்கப் பட்டுள்ளது. இப்பாடலில் வரும் 'மானபரன் பாவேந்தன் தம்வேந்தன்' என்ற அடி, சில தளங்களில் 'மானபிரான் மாவேந்தன் ஏகம்ப' என்ற பெயருடன் பதிவு செய்யப்பட்டுள்ளது.



## கதைக் களங்கள்

வந்தியத்தேவன் ஒரு தூதுவன் என்பதால், கதை இந்தியாவிலும் இலங்கையிலும் பல இடங்களுக்கு வாசகரை அழைத்துச் செல்கிறது. இவ்விடங்களை வர்ணிக்கும் பல பாடல்கள் வருகின்றன. இவ்வாறு திருவையாறு, பழையாறை, மாமல்லபுரம், கோடியக்கரை, மாதோட்டம், தஞ்சை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்கள் பாடப்படுகின்றன. இதற்கு கல்கி, திரு ஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார், திருமங்கை ஆழ்வார், நம்மாழ்வார் மற்றும் சேக்கிழார் ஆகியோரின் பாடல்களைக் கையாளுகிறார். கதைக்கு முன் பாடப்பட்ட பாடல்களோடு நிற்காமல், ஆசிரியர் பிற்காலத்துப் பாடல்களையும் ஆசிரியர் கூற்றில் சுட்டிக்காட்டியுள்ளார். இவற்றோடு முத்தொள்ளாயிரத்திலிருந்து சோழர்களின் பலத்தை உணர்த்தும் ஒரு பாடலையும் குறிப்பிட்டுள்ளார்.

"கச்சி ஒரு கால் மிதியா, ஒரு காலால்
தத்து நீர் தன் உஞ்சை தான் மிதியா _ பிற்றையும்
ஈழம் ஒரு கால் மிதியா, வருமே நம்
கோழியர் கோக்கிள்ளி களிறு."

இப்பாடலில் கிள்ளிவளவனின் யானை, உறையூரில் நின்று கொண்டு, காஞ்சி, தஞ்சை மற்றும் இலங்கையை ஒவ்வொரு காலால் மிதித்து நிற்கும் என்று கூறப்படுகிறது.

## கதைப்போக்கு

இப்பாடலும் விளக்கமும், அருள்மொழி வர்மனால் அவரது நண்பர்களுக்குக் கூறப்படுகிறது. இவ்வாறு பல பாடல்கள் கதாபாத்திரங்களால் பகிரப்பட்டும், பாடப் பட்டும் வருகின்றன. சிலப்பதிகாரத்தை நினைவூட்டும் விதமாக 'பொன்னியின் செல்வனில்' கூத்து போன்ற காட்சிகள் வருகின்றன. ஒரு கூத்துக் காட்சியில், மணிமேகலையைத் தழுவி

"பசியும் பிணியும் பகையும் அழிக!
மழையும் வளமும் தனமும் பெருக!"

என்ற வரிகளுடன் பார்வையாளர்கள் வாழ்த்தப்படுகின்றனர். சில காட்சிகளில் பெண்கள் பொழுதுபோக்கிற்காகப் பாடுகின்றனர். இத்தகைய சந்தர்ப்பம் ஒன்றில், சோழ இளவரசி குந்தவையின் தோழிகள், சிலப்பதிகாரத்தில் இடம்பெற்ற கானல் வரிப் பாடலைப் பாடுகின்றனர்.

"மருங்கு வண்டு சிறந்து ஆர்ப்ப
மணிப்பூ ஆடை அது போர்த்து
கருங்கயல் கண் விழித்து ஒல்கி
நடந்தாய், வாழி காவேரி!"

என்று கதையின் பெயர் காரணமான நதியைப் போற்றிப் பாடுகின்றனர்.

## உரையாடல்

இவற்றைவிட, 'பொன்னியின் செல்வனில்' பாடல் காட்சி எனக்கூறும் போதே வாசகர்களுக்கு ஒரு கதாபாத்திரம் ஞாபகத்திற்கு வரும். அவர் தான் ஆழ்வார்க்கடியான் என அழைக்கப்படும் திருமலை. வைணவ மதப்பற்றால் அவர் அடிக்கடி சைவர்களுடன் சண்டைக்குச் செல்வார். இந்தக் காட்சிகளிலும், வேறு காட்சிகளிலும் தனது பெயருக்கு ஏற்ப, அவர் ஆழ்வார்களுடைய பாசுரங்களைப் பாடி வருகிறார். குறிப்பாக, திருவாய்மொழியில் இருந்து ஏழு பாடல்களைப் பாடுகிறார்.

ஆழ்வார்க்கடியான் பாசுரங்களோடு நிற்காமல் திருக்குறளையும் பல இடங்களில் பாவிக்கிறார். இன்று நாம் திருக்குறளைப் பயன்படுத்துவதைப் போல், தக்க சந்தர்ப்பத்தில் பல கதாபாத்திரங்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்க ஒரு குறளைக் கூறுவர். 'பொன்னியின் செல்வனில்' வரும் 8 குறள்களில் பல கதைக்கு ஏற்ப அரசியல் மற்றும் அங்கவியல் பற்றியவை. இக்குறள்கள் கூறும் எச்சரிக்கைகளை கதாபாத்திரங்கள் ஏற்கிறார்களா? இல்லாவிட்டாலும், அவை வாசகர்களுக்கு நிகழப்போவதை எதிர்வு கூறுகின்றன.

"துறந்தார் படிவத்தர் ஆகி இறந்து ஆராய்ந்து
என்செயினும் சோர்விலது ஒற்று."

தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)

## BASEMENT FOR RENT

**MIDDLEFIELD & DENISON**
2 bedroom walk-out bsmt for rent. Sep. entrance, laundry & 1car parking. 2 mins. walk to YRT bus stop & Schools. Avial. June 01, 2022.
தொடர்புகளுக்கு: 647.710.1820

---

**14TH AVENUE & MCCOWAN**
2 bedroom bsmt for rent. Sep. Entrance. Parking, Laundry. Close to alal facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.318.7103**

---

**BIRCHMOUNT & LAWRENCE**
1 bedroom bsmt for rent. Sep. entrance,Parking, laundry. Close to all facilities. Avail. JULY 01, 2022.
**416.826.3870 / 647.859.1020**

---

**KENNEDY & EGLINTON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
**647.869.3509 / 416.271.2377**

---

**MIDDLEFIELD & HIGHGLEN**
***1 bedroom bsmt for rent***
***Sep. entrance, 1 parking, laundry***
***Avail. immediately***
தொடர்புகளுக்கு: **416.823.7576**

---

**9TH LINE &14TH AVENUE**
2 Bedroom new bsmt for rent. Sep. entrance, parking. Students or small family preferred. Close to Bus. Avail. July 01, 2022.
***Call: 416.829.3212***

---

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.859.7980**

---

**BIRCHMOUNT & SHEPPARD**
***2 bedroom bsmt for rent. Sep. entrance. Students couple or small family preferred. Avail.*** immediately.
தொடர்புகளுக்கு: **416.899.9199**

## BASEMENT FOR RENT

**BRIMLEY & EGLINTON**
3 Bedrooms 2 washrooms **bsmt** for rent.
**MORNINGSIDE & LAWRENCE**
3 bedrooms walkout 2 full washrooms **Bsmt** for rent. Parking, sep. laundry. Avail. June 01, 2022.
தொடர்புகளுக்கு : **647.981.1997**

## BASEMENT FOR RENT

***MCCOWAN & LAWRENCE***
***2 Bedrooms & 2 washrooms bsmt for Rent. Close to mall, library, hospital & 24 hrs. TTC. Avail.*** immediately.
தொடர்புகளுக்கு: **416.904.7212**

மேலும் பக்கங்கள் 13,15,16,17

32ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

## ROOM FOR RENT

**WARDEN & FINCH**
***Rooms for rent with food.***
***Seniors Preferred.***
***Please Call : 647.667.0482***

---

**BIRCHMOUNT & FINCH**
One room for rent in a condo. Students, Working ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.670.6542**

---

**PHARMACY & FINCH**
One room for rent in upstairs. Sep. washroom. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு:: **416.201.1222**

---

**BRIMLEY & EGLINTON**
Room for rent. Laundry. No smoke. No parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416.294.0193**

## BASEMENT FOR RENT

***ORTON PARK & BRIMORTON***
2 bsmt for rent. Sep. entrance, parking & laundry. Students, couple, small family preferred. Avail. immediately.
**416.821.8856/ 647.889.4524**

## BASEMENT FOR RENT

***Bayly & Audley***
Neat & Clean & spacious 1 bedroom, kitchen & 1 bath in the bsmt avail. for rent in a family-friendly neighborhood. Sep. entrance. Parking, Laundry. No smoking & no pets. Close to HWY 401. Close to grocery store, community centre & pharmacy.
***Call: 416.998.8156***

## BASEMENT FOR RENT

***14TH AVENUE & 9TH LINE***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, Laundry. Close to elementary school, park & bus. Avail. immediately.
***416.904.7531 / 416.558.4929***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## HOUSE FOR RENT

***WESTNEY & HWY 401***
4 bedroom house for rent. 4 parking plus 2 bedroom bsmt with sep. entrance. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**416.201.1222**

---

**NEILSON & MCLEVIN**
Two bedrooms condo. town house for rent. 1 car parking & 1 washroom. Monthly rent $2000 plus utillities.
***Please call: 647- 533 -2059***

---

**BURKHOLDER & TAUNTON (Pickering)**
3 bedroom plus den brand new semi detached house for rent. Close to all facilities. Avail. immediately.
***416.587.6564 / 647.678.0611***

---

**NEILSON & SHEPPARD**
**4 bedrooms house for rent. Also 2 bedroom bsmt for rent. Sep. entrance. Parking.**
தொடர்புகளுக்கு: **416.409.6480**

## BASEMENT FOR RENT

***MARKHAM & STEELES***
***2 bedroom bsmt for rent. Sep. entrance, laundry. No Parking.Single or couple preferred. Close to all facilities. Avail. immediately.***
***647.787.3784 / 905.294.4382***

## BASEMENT FOR RENT

***MARKHAM & 14 th AVENUE***
Newly renovated beautiful 4 bedroom bsmt for rent. 2 bathrooms Sep. entrance, 2 Parking & lots of upgrades. Minutes away from hwy 407. Avail. immediately.
***Call Ram - 416.722.7351***

## BASEMENT FOR RENT

***MARKHAM & DENISON***
2 Bedroom bsmt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to Costco & all facilities. Avail. immediatley.
தொடர்புகளுக்கு: **416.300.7595**

நன்றாகவும், கவனமாகவும் செய்யப்பெற்ற காரியங்களைப் பற்றி அஞ்ச வேண்டியதில்லை.
- ஷேக்ஸ்பியர்

## BASEMENT FOR RENT

***MIDDLEFIELD & FINCH***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable, internet. Close to TTC, Datta food & Mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.278.8723**

## BASEMENT / CONDO FOR RENT

***MARKHAM & ELLESMERE***
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry.
***MC.COWAN & FINCH***
2 bedroom & 2 bathroom CONDO for rent .
**416.666.5627 / 416.414.9905**

## BASEMENT FOR RENT

***PORT UNION & HWY 401***
2 Bedrooms bsmt Apartment for rent. Sep. entrance, 1 parking, laundry. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.831.4725**

## BASEMENT FOR RENT

***MARKHAM & STEELES***
***2 bedroom bsmt for rent. Sep. entrance, laundry. No Parking. Single or couple preferred. Close to all facilities. Avail. immediately.***
***647.787.3784 / 905.294.4382***

## BASEMENT FOR RENT (ALSO ROOMS)

***KENNEDY & EGLINTON***
***LIVING, BEDROOM & KITCHEN + ALL FACILITIES.***
***PARKING - PRIVATE ENTRANCE***
***PLEASE CALL:***
***416.285.4695/ 647.636.2364***

## BASEMENT FOR RENT

***TAPSCOTT & FINCH***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry with air condition. Close to TTC, mall,school. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: **416.829.9797**

## BASEMENT FOR RENT

***MARKHAM & ELLESMERE***
3 Bed room bsmt for rent. Sep. entrance, parking, laundry.Close to Centennial College and Schools. 2 Mins walk to TTC. No pets & smoke. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **647.706.5914**

## BASEMENT FOR LEASE

**MCCOWAN & 14TH AVENUE**

TWO BEDROOMS +TWO WASHROOMS +ONE PARKING SPOT, SEPARATE ENTRANCE, Ensuite Laundry (Not Shared)
PRICE - $1650+33% UTILITIES.

MORE INFO CALL: **416.303.0910**

## BASEMENT FOR RENT

***MIDDLEFIELD & DENISON***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Including Utilities. Close to all facilities. Avail. immediatley.

தொடர்புகளுக்கு: ***416.523.1677***

## BASEMENT FOR RENT

***BRIMLEY & LAWRENCE***

1 bedroom walk-out bsmt. for rent. Sep. entrance, sep. laundry, washroom & Kitchen. Spacious and bright backyard with trees. Close to all facilities. Avail. Immediately.

தொடர்புகளுக்கு: ***416.648.7283***

## BASEMENT FOR RENT

***ELLESEMERE & NEILSON***

2 Bedroom bsmt. for rent. Also one bedroom bachelor apt. for rent. Walking distance to College , U of T & Schools. Avail. immediately.

தொடர்புகளுக்கு: ***416.880.3636***

## BASEMENT FOR RENT

***14 th AVENUE & 9th LINE MARKHAM***

***2 bedroom newly built bsmt for rent. 2 full washrooms. Good location & Close to schools & HWY.***

தொடர்புகளுக்கு: ***416.918.9848***

## HOUSE / BASEMENT FOR RENT

***MARKHAM & EGLINTON***

3 Bedroom house for rent. (Single rooms available.) Parking, laundry. Also 1 bedroom bsmt. for rent. Sep. entrance & close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: ***416.906.2520***

## BASEMENT FOR RENT

***MARKHAM & DENISON***

3 Bed room bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Immediatley.

தொடர்புகளுக்கு: ***647.703.3254***

## BASEMENT FOR RENT

***MARKHAM & DENISON***

2 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry. 2 mins. walk to Markham Road. Close to all facilities. Avail. June 05, 2022.

தொடர்புகளுக்கு: ***647.205.7194***

## ROOM FOR RENT

***RICHMOND HILL***

***( YOUNG & ELGINMILLS)***

வயோதிப குடும்பத்தினர் வாழும் வீட்டில் ஓர் அறை வாடகைக்கு கொடுக்கப்படும். Close to bus stop. Without car and retired peple mostly welcome.

தொடர்புகளுக்கு: Raja - ***416.454.1893***

## ROOM FOR RENT

**KENNEDY & EGLINTON**

1 Room for rent in a 2 bedroom aprt. Working Students, 65+seniors preferred. Close to TTC, Kennedy subway. No pets, smoking, drinking. Avail. immediately

**416.857.5252 / 416.752.4444**

## BASEMENT FOR RENT

**MARKHAM & 14th AVE.**

2 bed room bsmt for rent. 1 washroom, Sep. entrance. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.296. 7932**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR House, Condo, Basement**

வாடகைக்கு உள்ளது.

அழையுங்கள்- **647.861.8240**

## ROOM FOR RENT

***NEILSON & TAPSCOTT***

1 Room for rent in a 2 bedroom condo. Single Female preferred. Close to all facilities . Avail. Immediately.

தொடர்புகளுக்கு: ***647-771-3054***

## ROOM FOR RENT

***MCCOWAN & DENISON***

One bedroom for Rent. All inclusive. Avail. immediately.

தொடர்புகளுக்கு: ***416.522.3314***

## HOUSE/BASEMENT FOR RENT

**TAPSCOTT & CROWTRAIL**

1 Bedroom basement for rent.

**STAINES & MORNINGSIDE**

2 Bedroom walkout basement for rent.
3 Bedrooms house for rent.

**Contact: 647.686.8590**

## வாடகைக்கு கொடுத்திட ,பெற்றிட

Rooms: 5 BR, 4 BR, 3 BR, 2 BR, 1 BR APT, House, Condo, Basement GTA, Totonto, Scarborough, york, Peel, Durham, Halton ஆகிய பகுதிகளில் **A1 Canada Rental Services**
**MR Ratha Francis Xavier**
**416.857.5252 / 416.752.4444**

## HOUSE FOR RENT

***NEILSON & FINCH***

***3 bedroom bangalow house for rent. Laundray &1parking. Close to all facilities. Avail. July 01, 2022.***

தொடர்புகளுக்கு: **647.760.3620**

## HOUSE FOR RENT

***MARKHAM & PAINTEDPOST***

3 Bedroom house for rent. ***5*** parking spots, laundry. No pets. Close to all facilities. Avail. July 01, 2022.

தொடர்புகளுக்கு: ***(647) 998.0181***

## HOUSE FOR RENT

***Markham Rd. & Sheppard Ave.***

3 Bedroom house for rent. 2 Full washrooms & Separate laundry room. Steps to TTC, School & Grocery stores. No pets. Avail.immediately.

தொடர்புகளுக்கு: ***416.558.2228***

## வீடு வாடகைக்குபெற்றிட / கொடுத்திட

வாடகைக்கு வீடுகள், Condo, Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட

அழையுங்கள்:

**647.402.2937**

## BASEMENT FOR RENT

***BROCK & KINGSTON***

1 bedroom, 1 full washroom and a parking also available. Sep. entrance. walking distance to Pickering Town centre. Close to HWY 401 & all shopping facilities. Suitable for Small family or couple. No pet & No smoking. Avail. immediately

தொடர்புகளுக்கு: ***416. 731.8542 / 416.301.4783***

## ROOMS FOR RENT

**MORNINGSIDE & SEWLLES**

Multiple bedrooms available with bathroom & kitchen. தனித்தனி அறைகளாகவும் கொடுக்கப்படும். Close to TTC (2 Buses).

Contact owner about renting price.

தொடர்புகளுக்கு: **416.908.9494**

## *HOUSE / BASEMENT FOR RENT*

***WESTNEY & ROSSLAND***

4 bedrooms, 2 1/2 washrooms Detached two story house for rent. & 2 parking. Available July 15, 2022. 2 bedroom Basement for rent with separate entrance. Also 1 room available in Bowmanville.

தொடர்புகளுக்கு: ***416.836.0010***

## *HOUSE FOR RENT*

***HARWOOD & ROSELAND***

Ajax,Ontario - For Rent – Free hold townhouse - 2,000 sq. feet - 3 bedrooms & 2.5 bathrooms. Hardwood floor On Family/ Living Room. Steps to Schools, Shopping, Parks. Spacious Kitchen. W/O To Private Fenced Yard. ***Please Call: 647.588.6214***

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

## HELP WANTED

Looking for ***Drivers and Cook*** for a ***PIZZA RESTAURANT*** in ***OSHAWA*** (24 Simcoe St. N, Oshawa, L1G 4R8)

Full time & Part time job available.

தொடர்புகளுக்கு: ***416.826.4205***

## PICK UP & DROP OFF

வயதானவர்களை Doctors office, physio போன்ற இடங்களுக்கு Pick up & drop off உதவி செய்யப்படும்.

தொடர்புகளுக்கு: **647.646.2616**

## பராமரிப்பாளர் தேவை

ஸ்காபரோவில் வாழும் நடமாடக்கூடிய முதியவர் ஒருவரை வீட்டில் இருந்து பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் உடனடியாகத் தேவை. அனுபவம் தேவை இல்லை.

***Live in caregiver needed.***
***Experience not needed.***

தொடர்புகளுக்கு: **647.540.9520**

## AZ DRIVERS WANTED

**Seeking for experienced AZ drivers for CANADA & USA.**

***Requirements:***
- ***Minimum 3-4 years of experience.***
- ***Cross Border experience***
- ***Good Communication Skills***
- ***Clean Abstract***

***Please Contact - 416-835-6701***

## DRIVER WANTED

***Drivers Wanted With Car For Courier Service.***
***MONDAY TO FRIDAY***
***9:00am to 5:00pm***
***For More Info.***

**416.836.0074**

## USED CARS WANTED

USED TOYOTA CARS, VANS WANTED. ANY CONDITION.

**Call:**
**437.688.6305**

## பராமரிப்பாளர் தேவை

***9TH LINE & MAJOR MACKENZIE***

பகுதியில் வயதான தம்பதியரைப் பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் தேவை. சமையல் வேலை தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: **416.996.9319**

## HELP WANTED

***MARKHAM***இல் உள்ள தமிழ் உணவகத்திற்கு அனுபவமுள்ள ஆட்கள் தேவை. தொடர்புகளுக்கு:

**647.205.9243**

## COOK WANTED

**WILD WING**

Markham & 16th Ave.
Cooks wanted.
FULL TIME / PART TIME AVAILABLE.

தொடர்புகளுக்கு: **647.961.2355**

## பராமரிப்பாளர் தேவை

***MCLEVIN & NEILSON*** இல் வயதான பெண்மணியைப் பராமரிக்கப் பராமரிப்பாளர் தேவை.

தொடர்புகளுக்கு: **416.629.6248**

## முதியோர் பராமரிப்பு

முதியோருக்கு 24 மணி நேர பராமரிப்பு மற்றும் சுடச்சுட உணவு இலங்கை முறைப்படி சமைத்து வழங்கப்படும். நீண்ட கால குறுகிய கால பராமரிப்பு வசதி வழங்கப்படும்.

**647.512.9820 / 647.868.2440**

## CLEANING JOB

***MAJOR MACKENZIE & MARKHAM***

பகுதியில் துப்பரவுப் பணிக்கு 2 பேர் தேவை. 7 நாட்கள் வேலை. வேலை நேரம் அதிகாலை 5 மணி முதல் 8 மணிவரை. 21/2 மணி நேரம். அனுபவமுள்ள ஆட்கள் தேவை. ***Family preferred.***

தொடர்புகளுக்கு: **647.701.9809**

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.

**MOVING / DELIVERY AVAILABLE.**

**Contact :** பிறேம்-**647.835.5244**

## மணமகள் தேவை

1991இல் Canadaஇல் பிறந்த இந்து வேளாளர்குலத்தைச் சேர்ந்த Federal Govt.இல் நல்ல உத்தியோகத்தில் உள்ள மணமகனுக்கு மணமகளை தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு: **647.248.3644**

## மணமகள் தேவை

சைவ வேளாளர் குலத்தில் பிறந்த 31 வயது பட்டதாரி மணமகனுக்கு அதே குலத்தில் பிறந்த பட்டதாரியும் நல்ல தொழில் செய்யும் மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு: ***416.903.0821***




## மணமகன் தேவை

31 வயது கணவனை இழந்து 8 வயது மகனுடன் இலங்கையில் வாழும் இளம் பெண்ணுக்கு வெளிநாட்டில் வாழும் துணை ஒருவரைத் தேடுகிறோம்.

***077.605.4756 Viber***
***076.326.2163 Viber***

## HELP WANTED

PICKERING ல் அமைந்துள்ள ITALIAN TAKE-OUT RESTAURANTக்கு PIZZA MAKER, KITCHEN HELPER & CASHIER தேவைப்படுகின்றனர். அனுபவம் உள்ளவர்களும் ஆர்வம் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளவும். ***MOHAN- 416.722.6557***

## COOK WANTED

***RHINOS ROADHOUSE***

***5078 Rice lake Drive, Bewdley, Ontario.***

We are looking to join our team. Line cooks, prep cooks full time hours. We are open Monday to Sunday 8am to 9pm. Must be available weekend days nites.

***Please contact - Kodeeswaran : 289.244.8555***

## JOB JOB JOB

***Sai Trading Fancy Jewellery Store***
***5800 Sheppard Ave. East unit-8***
***Part time/ full time.***
***Job available (women only)***

தொடர்புகளுக்கு:***: Uma Sritharan at 416-580-3945***

## LINE COOK WANTED

***QUEEN & LESLIE***இல் அமைந்துள்ள ***English Pub***க்கு

***Chef and line Cook Wanted immediately.***

***FULL TIME / PART TIME Onsite parking available.***

***Call : 416.220.9179 / Email: chadsenagroup@gmail.com***

## HELP WANTED

We are Looking for Cook & Cashier for Canadian restaurant in Oshawa.
Full time & part time available.
சம்பளம் மற்றும் சலுகைகள் பேசி தீர்மானிக்கப்படும்.

Please Call: **416.660.8442**

## TUTORING

### FRENCH TUTION

Core French, FSL classes and Immersion classes for Ontario School Boards are handled by an experienced teacher working with TCDSB and YRDSB. French for beginners and coaching for TEF are offered.

***Contact: Dr. Jayamarie S. Tamby., M.A., B.Ed., M.Phil., Ph.D.***

தொடர்புகளுக்கு: ***(647) 385.7418***

## HELP WANTED

***Welesley & Parliament*** இற்கு அருகாமையிலுள்ள ***Convenience Store*** இற்கு வேலைக்கு ஆள் தேவை.
ஓய்வு ஊதியம் பெறுபவர்கள் விரும்பத்தக்கது.
சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

***Please Contact : 416.473.8520***

## RENOVATION

- *Plumbing*
- *Painting*
- *Electric*
- *Tiles*
- *Basement*
- *Hardwood*
- *Laminating*
- *Kitchen*
- *Landscaping*
- *Interlock*

ஆகிய வேலைகள் செய்துகொடுக்கப்படும். அழையுங்கள்

***Dinesh: 647.625.2239 / drsharvin15@gmail.com***

## DEVOTED AUTO CARE

For all your automotive needs, Auto repair, interior & exterior wash & polishing , ceramic coating, wheels & tires, tints & windshields & much more. Licensed technician performing all repairs & work.

உங்களின் அனைத்து வாகனத் தேவைகளுக்கும், வாகனப் பழுதுபார்ப்பு, உட்புறம் மற்றும் வெளிப்புறம் கழுவுதல் & மெருகூட்டல், சக்கரங்கள் & ரயர்கள், கண்ணாடிகள் மற்றும் பல. உரிமம் பெற்ற தொழில்நுட்ப வல்லுநர் அனைத்து பழுது மற்றும் வேலைகளைச் செய்கிறார்.

தொடர்புகளுக்கு: ***647-242-7212*** **Stouffville at 64 Sandiford drive # 16 L4A 7X5**

## COOK WANTED

### WIMPY'S DINER

***Need full time experienced cook for all day breakfast restaurant Wimpy's Diner at OSHAWA.***

***Good pay or Negotiable.*** சம்பளம் பேசித்தீர்க்கப்படும்

***Please send resume to Email: noorfaiz12345@yahoo.com***

***Or Call: 416.882.0044***

## CONVENIENCE STORE FOR SALE

Scarboroughவில் **Brimley & St. Clair** -Brimley beachஇற்கு அருகாமையில் 17 வருடகாலமாக நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் Convenience Store Business விற்பனைக்கு உள்ளது. வாடகை $2,500.

மேலதிக விபரங்களுக்கு - **647.703.3254**

## BUS SERVICE

### RAINBOW CHARTER SERVICE INC.

**(SCARBOROUGH)**

உங்கள் பயணத் தேவைகள் எதுவானாலும் அழையுங்கள்.

Please call or text me : **416.451.0055**

**info@rainbowcharterservice.ca**

## RENT WITH US

We help the Landlords to find quality tenants in less time. Rent your houses, basements, condos., apartments through us. Our service is all over GTA. For further details please contact : **647.832.6899**

## RENTAL SPACE WANTED FOR STUDENTS

***We are working with a group of students who are looking to rent rooms , house or basement apartments in Scarborough and surrounding area.***

உங்களது ***rooms , house or basement*** இனை சட்டரீதியாக ***University / College Students*** இற்கு உடனடியாக வாடகைக்கு கொடுத்திட

**Logee - 416.272.6811 / Hari - 647.262.8490**

*HomeLife Future Realty Inc. Brokerage*

## LAUNDRY BUSINESS FOR SALE

***Business only sale. 900 Sqft. Surrounded by apartment Buildings, Over 20 years business. New Maytag washer 12 nos, Dryers 16 nos, Tank less water heater, Gross rent $2,260, OSHAWA - TAUNTON / SIMCOE***

***Please Call: Raja - 416.315.9397***

**HOMELIFE/GTA REALTY INC.** Brokerage*

**5215 Finch Ave.. E. #203, Toronto, ON M1S 0C2**

• Independently Owned and Opeated



Property Management
Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**Available for Rent**

Mississauga – Thomas/Tenth Line W – Condo Townhouse
(3+1Brm + 3Bath) [$3,200/m]
Mississauga – Burnhamthorpe Rd/Confederation – Condo
(2+1Brm + 2Bath) [$3,700/m]
Toronto – Mccowan/Lawrence – Detached
(2+1Brm + 2Bath) [$3,450/m]
Toronto – Lake/East Ave/Broadbridge - Detached
(4Brm + 3Bath) [$3,200/m]
Toronto – Starchan/Liberty - Condo
(2Brm + 2Bath) [$2,600/m]
Toronto – Donmills/Eglinton – Condo
(2Brm + 1Bath) [$2,550/m]
Toronto – Scarbo Golf Club/Lawrence – Detached
(3Brm + 1Bath) [$2,100/m]

**Available for Rent**

Oshawa – Wilson Rd S/King St E - Detached
(3+2Brm +2Bath) [$3,900/m]
Carlington– Hwy401/Hwy2 - Bsmt
(2Brm +1Bath) [$1,950/m]
Carlington– Middle Rd/William Fair Rd - Bsmt
(2Brm +1Bath) [$2,000/m]
Pickering– Rosebank; Strouds Lane - Bsmt
(2Brm +1Bath) [$2,000/m]
Pickering– Whites Rd/Kingston Rd – Condo Townhouse
(2Brm +3Bath) [$2,675/m]
Ajax– Salem Rd/Rossland Rd/Audley Rd – Detached
(4Brm +3Bath) [$3,900/m]
Ajax– Church/Rossland Rd – Detached
(3Brm +3Bath) [$3,300/m]

**BUY / SELL/ LEASE / INVEST**

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களை எப்படி தேர்ந்தெடுத்துக் கொடுப்பது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வாழ்ந்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

**Real Estate & Property Management** துறையில் எனது 32 வருட அனுபவம் உங்களுக்குக் கைகொடுக்கும்.

கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999

We are managing Condos, Houses, Apartments in the area of
Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.

# பொன்னியின்...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

"பொய்மையும் வாய்மை இடத்த புரை தீர்ந்த
நன்மை பயக்கும் எனின்."
என்ற குறள்கள் ஒற்றனான ஆழ்வார்க்கடியானை நன்றாக விவரிக்கின்றன.

திருக்குறளோடு கதாபாத்திரங்கள் பல்வேறு இலக்கியங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர். இவற்றில், சைவ மற்றும் வைணவ இலக்கியங்கள் தான் அதிகமானவை. உதாரணத்திற்கு மதுராந்தகனின் தாயான செம்பியன் மாதேவியை, ஒரு காட்சியில் நம்பியாண்டார் நம்பி சந்திக்க வருகிறார். அங்கு, அவர் திருஞானசம்பந்தர் பாண்டிய மன்னரின் சூலை நோயை நீக்கிய கதையைக் கூறினார். இக்காட்சியில் அவர், சோழ இளவரசியும் பாண்டிய மாதேவியுமான 'மங்கையர்கரசி' பற்றிய பதிகத்தையும், 'மானினேர் விழி' என்ற தேவாரத்தையும் சபையில் பாடுகிறார். பிற்காலத்தில் இராஜராஜ சோழன், நம்பியாண்டார் நம்பி மூலம் சைவ இலக்கியங்களை 12 திருமுறைகளாகத் தொகுத்தார் என்பது நாம் அறிந்த வரலாறு.

சிவ பக்தரான செம்பியன் மாதேவி, வேறு ஒரு காட்சியில் திருநாவுக்கரசர் திருவையாற்றிலிருந்து கயிலையைக் கண்ட கதையைக் கூறுவதன் மூலம், ஆசிரியர் 'மாதர் பிறைக்கண்ணியானை' என்ற தேவாரத்தைக் கதையில் சேர்க்கிறார். இப்பாடலை சேந்தன் அமுதன் என்ற இன்னொரு சிவபக்தன் பாடுகிறார். வேறு ஒரு சுவாரசியமான காட்சியில், அவர், பூங்குழலி என்பவரை தற்செயலாகக் காட்டில் சந்திக்கிறார். அவர்களை பகைவர்கள் ஒற்றுக் கேட்டுக் கொண்டு இருக்கின்றனர் என்பதால்,



சேந்தன் அமுதன் பூங்குழலியிடம் செய்திகளை மெதுவாகச் சொல்லி, இடையில் பாடல்களைச் சத்தமாகப் பாடுகிறார். பூங்குழலியும் அவ்வாறே செய்கிறார். இந்த உரையாடலில், இவர்கள் சுந்தர மூர்த்தி நாயனார், கோடியக்கரை மற்றும் ஆரூர் ஆகிய தலங்களில் பாடிய தேவாரங்களைப் பாடுகின்றனர். இவற்றின் அடிகள் கதையுடன் நன்றாகப் பொருந்துகின்றன. 'காடேல் மிகவலிது' என்ற தேவாரத்தில், காரிகை அஞ்ச வைக்கும் காட்டில், ஆந்தைகள் கூவும் காட்சி சித்தரிக்கப்படுகின்றது. பூங்குழலியையும் சேந்தன் அமுதனையும் ஒற்றுக் கேட்பவர்கள், ஆந்தைகள் போலக் கூவி தம்மை அடையாளப்படுத்துவதை இது குறிக்கும்.

'பறக்கும் எம் கிள்ளைகாள்' என்ற தேவாரத்தை, சுந்தரர் கைக்கிளை திணையில் அமைத்தார். இதுபோல, சேந்தன் அமுதனும் பூங்குழலி மேல் ஒருதலைக் காதலையும் கொண்டார். இவ்வாறு கதாபாத்திரங்கள் பாடியும் பாடாமலும் வரும் 57 பாடல்களில் பெரும்பாலானவை, ஒருமுறை மட்டும் வருகின்றன. சில, ஒரே கதாபாத்திரத்திற்கு இரு காட்சிகளில் வருகின்றன. ஒருசில பாடல் வரிகள், பலமுறை பாடப்பட்ட வருகின்றன. இவ்வாறு, ஒரு கதாபாத்திரம் இவற்றை மீண்டும் மீண்டும் பாடுவதால், அவ்வடிகள் அக்கதாபாத்திரத்திற்கு அடையாளமாக மாறுகின்றன.

'பொன்னார் மேனியனே' கேட்கும்போது சேந்தன் அமுதனும், 'கண்டோம் கண்டோம்' கேட்டவுடன் ஆழ்வார்க்கடியானும் கதையில் காட்சியளிக்கப் போகின்றனர் என, வாசகர்களுக்கும் பிற கதாபாத்திரங்களுக்கும் தெரியும். 'பொன்னியின் செல்வனில்' அதிக முறை பாடப்படும் பாடல், பூங்குழலியால் பாடப்படும் 'அலைகடலும் ஓய்ந்திருக்க, அகக்கடல் தான் பொங்குவதேன்' எனத் தொடங்கும் பாடல். இதை அமரர் கல்கியே இயற்றியுள்ளார். இதுபோல், கடம்பூர் இளவரசி மணிமேகலைக்காக ஆசிரியர். 'இனியபுனல் அருவி தவிழ், இன்பமலைச் சாரலிலே' என்ற பாடலை எழுதியுள்ளார்.

இதுவரை நாம் 'பொன்னியின் செல்வனில்' இடம்பெற்ற 57 பாடல்கள் சேர்க்கப்பட்ட முறைகளையும் இடங்களையும் ஆராய்ந்தோம். வரலாற்றை உணர்த்தவும், கதைத்தளங்களை வர்ணிக்கவும், கதை நிகழ்ச்சிகளை அழகுபடுத்தவும், உரையாடல் காட்சிகளுக்காகவும் இவை சேர்க்கப்பட்டுள்ளன. இதற்காக ஆசிரியர் கல்கி: தேவாரம், திருவிசைப்பா, திருவாய்மொழி, பெரியபுராணம், திருக்குறள், முத்தொள்ளாயிரம், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் மற்றும் வீரசோழியம் ஆகியவற்றிலிருந்தும் அவரது சொந்த ஆக்கங்களிலிருந்தும் பாடல்களைப் பயன்படுத்தியுள்ளார்.

கதையை மேம்படுத்தவோ, அவரது ஆராய்ச்சித் திறனைக் காட்டவோ மட்டும் அல்லாமல், தமிழ் இலக்கியத்தை ஒரு வார இதழ் மூலம் பொதுமக்களுக்குக் கொண்டுசெல்ல வேண்டும் என்பதற்காகவும் ஆசிரியர் இப்பாடல்களைச் சேர்த்திருக்க வேண்டும்.

எனவே, அவரது வழியில் நானும், கல்கி எழுதிய ஒரு பாடலின் அடிகளைக் கூறி இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.
"சோர்வு கொள்ளாதே மனமே - உன்
ஆர்வம் எல்லாம் ஒருநாள் பூரணமாகும்!
காரிருள் சூழ்ந்த நீள் இரவின் பின்னர்
காலை மலர்தலும் கண்டனை அன்றோ
தாரணி உயிர்க்கும் தாமரை சிலிர்க்கும்
அளிகுலம் களிக்கும் அருணனும்
உதிப்பான்!

# A New Project by

TRIDEL®
BUILT FOR LIFE

## @ 60 Queen St. East, Toronto
## (Queen + Church)



- 57 Storeys
- 445 Units
- 2 Blocks East of Yange Street
- Height 60Ft. (185.9m)

Developers : TRIDEL & BAZIS
Architect : Core Architect

*For More information Feel Free to Call .....*

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2
**Tel: 416-321-6969** * Independently owned and operated.





# காத்துவாக்குல ரெண்டு காதல் - திரைவிமர்சனம்




முதல் முறையாக விஜய் சேதுபதி, நயன்தாரா மற்றும் சமந்தா சேர்ந்து நடிக்கும் படம் இது.

இப்படத்தில் Rambo (விஜய் சேதுபதி) என்பவர் தனது சிறுவயதில் நடந்த சில சம்பவங்களால் தான் ஒரு துரதிர்ஷ்டசாலி என்று நம்பி வருகிறார். தான் மழைக்குள் சென்றால் மழை பெய்யாது நின்று விடும் என்றும், தான் விரும்பும் இனிப்பை வேண்டச் சென்றால், அது கடையில் இருக்காது என்றும், தான் ஒருவரை விரும்பினால் அவருக்குத் தீமை நிகழும் என்றும் Rambo நம்புகிறார்.

இவ்வாறு Rambo தனது தாய்க்குத் தீமை வராமல் இருக்க அவரை விட்டு விலகி தூரத்தில் உள்ள நகரத்தில் வாழுகிறார். தாய்க்குப் பணம் அனுப்பப் பகல் நேரத்தில் வாடகைக் கார் ஓட்டுநராகவும், இரவில் மதுபானம் பரிமாறுமிடத்தில் பாதுகாவலராகவும் (bouncer) பணிபுரிகிறார்.

இதனால் ஒருநாள் பகலில் தனது காரில் பயணியாக வந்த கண்மணியையும் (நயன்தாரா) இரவில் மதுபான விடுதிக்கு வந்தவரான கடிஜாவையும் (சமந்தா), Rambo சந்திக்கிறார். இரு



பெண்களுடனும் நன்றாகப் பழகுகிறார். பெண்களின் நட்பு காதலாக மாறும்போது அவர்கள் இருவருக்கும் Ramboவிற்கு மற்றப் பெண்ணுடன் தொடர்பு இருப்பது தெரியாமல் நாட்கள் நகர்கின்றன.

பின்னர், அவர்களுக்கு இது தெரிய வரும்போது, Ramboவிற்குப் பகலில் ஒருவராகவும், இரவில் இன்னொருவராகவும் வாழும் மனநோய் இருப்பதாகக் கூறப்படுகிறது.

Rambo கண்மணியைத் திருமணம் செய்வாரா? அல்லது கடிஜாவைத் திருமணம் செய்வாரா? இல்லாவிட்டால் இருவரையும் வேண்டாம் என்பாரா? அல்லது இரு பெண்களுடனும் வாழ்வாரா? என்ற கேள்விகளுக்குப் பதிலை படத்தைப் பார்த்து அறியுங்கள்.



இப்படத்தில் இரு கதாநாயகிகளும் அவர்களது கதாபாத்திரங்களுக்கு ஏற்ற விதத்தில் நன்றாக நடித்துள்ளனர். நயன்தாரா தனது சகோதரர்களை வளர்க்கும் பொறுப்புள்ள வங்காளப் பெண்ணான கண்மணியாக நடித்துள்ளார். சமந்தா மோசமான காதலனுடன் வாழும் ஒரு நாகரிகமான இஸ்லாமியப் பெண்ணாக நடித்துள்ளார்.

ஒரே நேரத்தில் கதாநாயகன் இரு பெண்களுடன் பழகும் கதையை இப்படம் மரியாதையுடன் சித்தரிக்க முயன்றுள்ளது. Rambo பலமுறை தான் இரு பெண்களையும் மரியாதையுடன் பார்க்கிறார் எனக் கூறி அவ்வாறே நடக்கிறார். இவ்வாறு அவர் பலமுறை கூறும் காட்சிகளால் படமும் நீள்கின்றது.

ஒருவருடன் அந்நியோன்னியமாகவும் மரியாதையுடனும் சில காலம் பழகினாலே அது அதிர்ஷ்டமான நட்பாகக் கருத வேண்டும் என்று இப்படம் கூற முயல்கிறது. இவ்வாறு பழகுவது திருமணம் செய்யும் நோக்குடன் அல்ல என்கிறது.

நகைச்சுவை, நீண்ட காட்சிகள், மெதுவான போக்கு மற்றும் தெளிவான விளக்கமின்மை இப்படத்தில் இருப்பதால் இக்கருத்தை நேரடியாகப் பார்வையாளர்களால் உணர முடியவில்லை. தற்போது முன்னிலையில் இருக்கும் இரு கதாநாயகிகள் சேர்ந்து நடிக்கும் படத்தைப் பொழுது போக்கிற்காகப் பார்க்க விரும்புவோர் பார்க்கலாம்.

வீடு வாங்க,விற்க,வாடகைக்கு பெற்றிட...
வைத்திய பரிசோதனையற்ற காப்புறுதிக்கும்...
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
416.670.7436
vanyjeganmohan@gmail.com
www.vanyhomes.ca
www.vjsfinancial.ca
✓ Buy/Sell/ Lease
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
VJS Financial Services
We ease your cost of living
5215 Finch Ave East. Unit 222 Toronto ON M1S 0C2

Welcoming new patients of all ages since 2000 at ...
Bridletowne Dental
Dr. Jeyapalan, BDS., DDS.
(University of Toronto) Dentist
416 492 3775
Bridletowne Dental
385 Silver Star Blvd, Suite 217 Scarborough, M1V 0E3
(Midland & McNicoll, MAXUM Building, In the RONA PLAZA)
www.bridletownedental.com

INDRA MICHAEL XAVIER
Broker
647.995.6829
indra.m.xavier@gmail.com
Buying Home/ Selling / Investing
HomeLife/Future Realty Inc.,
Brokerage Independently Owned And Operated
905.201.9977 905.201.9229

BUYING / SELLING HOMES
BALA MANI MBA
Sales Representative
Contact : 647-290-1022 | 0605bala@gmail.com | visit : www.realtorbala.ca
* Lawyer Fee, Moving Cost, Staging all Free of Cost.
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2
* Independently owned and operated.
* We help to find your best future home!

# எயிட்ஸ் நோயை இல்லாதொழிப்போம்




யதுசனா சவுந்தரராசா
அகவை 18

Acquired Immune Deficiency Syndrome அல்லது AIDS எனப் பொதுவாக அறியப்படும் நோயானது ஓர் உயிர் கொல்லி நோயாகும். 20ஆம் நூற்றாண்டில் மனிதனுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்த நோய்களுள் இதுவும் ஒன்று. HIV எனப்படும் மனித நோயெதிர்ப்புக் குறைபாட்டு வைரஸினால் ஏற்படும் இந்நோயானது மனித உடலின் நோயெதிர்ப்பு மண்டலத்தைத் தாக்குகின்றது. ஏறத்தாழ 36 மில்லியனுக்கும் அதிகமான உயிர்களை இதுவரை இந்நாய் காவு வாங்கியுள்ளது. எயிட்ஸ் நோய் கண்டுபிடிக்கப்பட்ட ஆரம்ப காலத்தில் காட்டுத்தீ போல பரவிவந்த போதிலும் அரசு மற்றும் அரசு சாரா நிறுனங்களின் தொடர் முயற்சியின் மூலம் மக்களிடையே இந்நோய் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

எயிட்ஸ் நோய்க்குப் பிரதான காரணியான HIV வைரஸானது அதன் DNAஇன் நகலை மனித உடற்கலங்களில் செலுத்துவதன் மூலமாக மனித உடலில் ஊடுருவுகின்றது. ரெடரோ வைரஸ் என அழைக்கப்படும் இவ்வைரஸால் தாக்கப்படும் கலங்கள் மனித நோயெதிர்ப்பு அமைப்பின் ஒரு பகுதியாக இருக்கும் வெள்ளை இரத்த அணுக்களாகும்.

HIVஆனது வெள்ளை இரத்த அணுக்களை அழித்து மனித நோயெதிர்ப்பு பாதிப்பானது உடலின் நோய்கள் குணமடைவதைத் தாமதப்படுத்துகிறது. அதாவது உடலில் காயங்கள் ஏற்படும் போது குருதி உறைவது தாமதப்படும் அல்லது தடைப்படும்.



HIVஆனது பிரதானமாக 3 வழிகளில் பரவுகின்றது. குருதிப் பரிமாற்றம், பிரசவம் மற்றும் பாலியல் தொடர்புகள் எயிட்ஸ் நோய் பரவும் பிரதான வழிகளாக அமைகின்றன. மனித உடலின் வெண் குருதிக் கலங்களை தாக்கிப் பாதிக்கத் தொடங்கும். HIVஆனது பாதிக்கப்பட்டவருக்கு வேறு ஏதேனும் நோய்கள் அல்லது தொற்றுக்கள் ஏற்பட வழிவகுக்கின்றது.
ஒப்பீட்டளவில் எயிட்ஸ் நோய்க்கான அறிகுறி தோன்ற எடுக்கும் காலம் மிகவும் அதிகமாகும். அதிகபட்சம் 12 ஆண்டு வரையும் எந்த அறிகுறியும் ஏற்படாதிருக்கும் வாய்ப்பும் உள்ளது. எய்ட்ஸின் பொதுவான அறிகுறிகளாகக் காய்ச்சல், சோர்வு, எடை இழப்பு, வயிற்றுப் போக்கு போன்றன ஏற்படும். பலவீனமான நோயெதிர்ப்பு சக்தி உள்ளவர்கள் தொடர் காய்ச்சல், இரவில் வியர்த்தல், தோல் வெடிப்பு, வாயில் புண்கள் மற்றும் பல அசாதாரண நோய் நிலைமைகளையும் எதிர்நோக்குகின்றனர்.

இன்றுவரையிலும் எயிட்ஸ் நோயைக் குணப்படுத்த மருந்துகளோ சிகிச்சையோ கண்டுபிடிக்கப்படவில்லை. ஆகவே இந்நோயானது உயிராபத்தை ஏற்படுத்தும் சாத்தியக்கூறும் அதிகமாகும்.

எயிட்ஸின் பரவலைக் கட்டுப்படுத்த அன்ரி-ரெட்ரோ வைரஸ் சிகிச்சை (ART) முறையானது பயன்படுத்தப்படுகிறது. இச் சிகிச்சைமுறை மூலம் HIV இனம் பெருகுவதை தடை செய்வதுடன் அதன் இயக்கத்தையும் குறைக்க முடியுமாக உள்ளது. நோயெதிர்ப்பு மண்டலத்திற்கு ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்கு நோயை இனங்கண்டு ஆரம்பத்திலேயே சிகிச்சையை தொடங்குவது நன்று.

எயிட்ஸ் நோயின் பரவலை குறைப்பதே அதன் பாதிப்பை இழிவாக்குவதற்கான வழிமுறையாகும். நோய் ஏற்பட்டதாக சந்தேகிப்போர் HIV பரிசோதனையை கிரமமாகச் செய்து கொள்ளல் வேண்டும். மேலும் பாதுகாப்பான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் எம் உடலின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களுக்கு அடிமையாதல் எயிட்ஸின் தாக்கத்தை உடலில் மேலும் வலுப்படுத்த வல்லது. மேலும், கிருமி நீக்கம் செய்யப்படாத ஊசிகள், தனிநபர் பயன்பாட்டுப் பொருட்களை பகிர்ந்து பயன்படுத்தல் போன்றனவும் ஆரோக்கிய மற்ற செயல்முறைகளாகும்.

எயிட்ஸ் நோய்த் தொற்றுக்குப் பின்னர் ஒரு மனிதனின் வாழ்க்கை நரகமாகின்றது. அதாவது சமூகம் இதனை ஒரு நோயாக மட்டும் பார்க்காது இழிவான மற்றும் வெறுக்கப்பட வேண்டிய ஒரு விடயமாக பார்க்கின்றது. இந்நிலையானது மாற்றப்பட வேண்டும். எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டோர் இன்னும் நீண்ட மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ முடியும் என்ற நம்பிக்கையை நமது அன்பு மற்றும் கவனிப்பின் மூலம் அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

எயிட்ஸ் ஓர் உயிர்கொல்லி நோயாக இருந்த போதிலும் அதனைக் குணப்படுத்தவோ, சமுதாயத்திலிருந்து முற்றாக ஒழிக்கவோ முடியாது. எயிட்ஸ் நோய்க்கான ஒரே தீர்வு அதன் பரவலைத் தடுப்பதும், சமூகத்தில் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுமே. இது போன்ற கொடிய நோய்களுக்கு நாம் பலியாகாமல் இருக்க முறையான மருத்துவப் பரிசோதனையை கிரமமாக மேற்கொள்ள வேண்டும். பிறரையும் ஊக்குவிக்க வேண்டும். வயது வேறுபாடற்று அனைவரையும் தாக்கும் இந்நோயிலிருந்து உயிர்கள் பலியாவதை தவிர்ப்பதற்கு சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரும் விழிப்புணர்வுடன் இருத்தல் வேண்டும். முறையான ஆராக்கியப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றுவதன் மூலம் எம்மையும், எம் சமூகத்தையும் எய்ட்ஸ் உயிர்கொல்லி நோயிலிருந்து பாதுகாப்போமாக.

தவறு செய்ய
வாய்ப்பு கிடைக்காத
வரை எல்லோரும்
நல்லவர்களே

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 . 724 . 7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough